பதிப்புகள்: 2003, 2006, 2008
திருத்திய மறுபதிப்புகள்: 2010, 2012, 2013, 2015

# கடவுள் தந்த

# கட்டளைகள்

# அறிவுரைகள்

# வாக்குறுதிகள்

**Edited Book**
**by**
**SERVANT OF GOD**

**தனிச்சுற்றுக்கு மட்டும்**

**இப்புத்தகத்தின் செய்திகள் தவறாகக் கையாளப்படுவதை தவிர்ப்பதற்காக இப்புத்தகம் மொழி பெயர்க்கப்படவோ, அச்சிடப்படவோ, இதில் ஏதேனும் ஒரு பகுதியையோ எந்தவகையிலும் பிரதி எடுப்பதும், வெளியிடுவதும் தடை செய்யப்பட்டுள்ளது.**

# முகவுரை

இயேசுவில் பிரியமான விசுவாசிகளுக்கு,

எல்லாம் வல்ல பரலோக தந்தையின் கட்டளைகளைப் பகிர்ந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நூல் **பதினேழு அத்தியாயங்களைக் கொண்டது.** இதில் பெரும்பகுதி பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் வசனங்களைத் தாங்கியுள்ளன. **அத்தியாயங்கள் 1-4,** கடவுள் தந்த கட்டளைகளை விளக்கமாக விவரிக்கின்றன.

**அத்தியாயங்கள் 5-9,** கடவுளின் ஆசீர் வாதங்களையும், நீதி தீர்ப்பையும் எடுத்துரைக்கின்றன.

**அத்தியாயங்கள் 10-12,** இறைபுகழ்ச்சியைக் குறித்தும், கடவுளைக் கண்டடைவது எவ்வாறு? மற்றும் சாத்தானை வெல்வது எவ்வாறு? என்ற வினாக்களுக்கு விவிலியத்திலிருந்து இறைவார்த்தைகள் தரப்பட்டுள்ளன.

**அத்தியாயம் 13,** ஒப்புரவு அருட்சாதனத்தின் முக்கியத்துவத்தை விளக்கி, பத்துக் கற்பனைகளை ஆதாரமாகக் கொண்டு, சில பாவங்கள் பட்டியலிடப் பட்டுள்ளன. இவை பாவசங்கீர்த்தனம் செய்வதற்கு பேருதவியாக அமையும்.

**அத்தியாயம் 14,** ஜெபமே ஜெயம் என்ற தலைப்பில் சில அடிப்படை ஜெபங்கள் தரப்பட்டுள்ளன. இவை ஆன்மீக வாழ்வின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும்.

**அத்தியாயம் 15,** பரிசுத்த ஆவியின் கனிகளையும் கொடைகளையும் விவரித்து, பரிசுத்த ஆவியைப் பெற்ற விசுவாசிகளிடம் காணப்படும் உள்ளுணர்வுகளையும் வெளியடையாளங்களையும் விவரிக்கின்றது.

**அத்தியாயம் 16,** "தேவனைத் தேடும் பிள்ளைகள் அவரில் வளர இயலவில்லை, ஏன்?" என்ற வினாவிற்கு தகுந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக, **அத்தியாயம் 17**, லொரேட்டோ மாதா பிரார்த்தனையைத் தாங்கியுள்ளது.

இந்த நூலானது இறைவார்த்தைகளை அடிப்படையாக கொண்டது. எனவே பக்தியுடன் வாசித்து, தியானித்துப் பெலனடைந்து இறையரசில் நுழைவோம்.

அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது அனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்.
**மத் 6:33**

இந்த நூல் பாவ இருளில் மூழ்கித்தவிப்போருக்கு ஒளியாகவும், தேவனில் வாழத்துடிக்கும் பிள்ளைகளுக்கு வழியாகவும் அமைந்துள்ளது. பல சாட்சிகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

இப்படிக்கு
**இயேசுவின் ஊழியன்**

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| **1.** | கடவுள் தந்த கட்டளைகள் | 1 |
| **2.** | ஆண்டவருக்கு எதிரான வழிபாடுகள் | 4 |
| **3.** | யாக்கோபில் மந்திரவாதிகள் இல்லை | 15 |
| **4.** | உடலும் ஒழுக்கக்கேடான இச்சைகளும் | 18 |
| **5.** | ஆசீர்வாதங்களும் சாபங்களும் | 25 |
| **6.** | மனந்திரும்புங்கள் உயிர் வாழ்வீர்கள் | 33 |
| **7.** | இயேசுவே மீட்பர் | 40 |
| **8.** | அன்பு இறைப்பண்பு | 41 |
| **9.** | என் ஆயன் ஆண்டவர் | 43 |
| **10.** | இறையாற்றலோடு அலகையை வென்றிடுங்கள் | 46 |
| **11.** | ஆண்டவரைப் போற்றுங்கள் | 47 |
| **12.** | முழு இதயத்தோடு தேடினால் நம்மைக் கண்டடைவீர்கள் | 50 |
| **13.** | ஒப்புரவு அருட்சாதனம் | 51 |
| **14.** | ஜெபமே ஜெயம் | 61 |
| **14.1** | கர்த்தர் கற்பித்த ஜெபம் | 61 |
| **14.2** | பரிசுத்த ஆவி ஜெபம் | 61 |
| **14.3** | உலகின் பாவங்களைப் போக்கும் செம்மறி | 62 |
| **14.4** | விசுவாசப் பிரமாணம் | 62 |
| **14.5** | மங்கள வார்த்தை ஜெபம் | 63 |
| **14.6** | கிருபைதயாபத்து மந்திரம் | 63 |
| **14.7** | மிகவும் இரக்கமுள்ள தாயே | 64 |
| **14.8** | இயேசுவின் திருஇருதய ஜெபமாலை | 65 |
| **14.9** | இறை இரக்கத்தின் ஜெபமாலை | 67 |
| **14.10** | என் ஆத்துமாவே கர்த்தரை | 68 |
| **14.11** | திரித்துவப் புகழ் | 68 |
| **15.** | தூய ஆவியானவர் அருளும் கொடைகள் | 69 |
| **16.** | தேவனைத்தேடும் பிள்ளைகள் அவரில் வளர இயலவில்லை ஏன்? | 78 |
| **17.** | லொரேட்டோ மாதா பிரார்த்தனை | 84 |

# 1. கடவுள் தந்த கட்டளைகள்

## இயேசுவின் கட்டளைகள்

**மத் 22:37-40**

1. **உன் கடவுளாகிய ஆண்டவருக்கு முழு உள்ளத்தோடும் முழு ஆன்மாவோடும் முழு மனத்தோடும் அன்பு செய்வாயாக.**
2. **உன்மீது நீ அன்பு காட்டுவதுபோல் உன் அயலான்மீதும் அன்பு காட்டுவாயாக.**

**௰ பத்துக்கட்டளைகள். யாத் (விப) 20:1-17**

ஆண்டவர் திருவுளம் பற்றிய எல்லா வாக்கியங்களுமாவன: எகிப்து நாட்டிலிருந்தும் அடிமை வாழ்வினின்றும் உன்னை விடுவித்த ஆண்டவராகிய நாமே உன் கடவுள். நமக்கு முன்பாக வேறே தேவர்களை நீ கொண்டிராதிருப்பாயாக. மேலே வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின் கீழுள்ள தண்ணீரிலும் உள்ளவைகளுக்கு ஒப்பான ஓர் உருவத்தையேனும் யாதொரு விக்கிரகத்தையேனும் உனக்கு நீ உண்டாக்கிக் கொள்ளவேண்டாம். அவைகளை வணங்கித் தொழவும் வேண்டாம். உன் கடவுளாகிய ஆண்டவராய் இருக்கிற நாம் வல்லவரும் எரிச்சல் உள்ளவருமாய் இருக்கிறோம்; நம்மைப் பகைக்கிறவர்களைக் குறித்து, தந்தையரின் அக்கிரமத்தைப் பிள்ளைகளிடம் மூன்றாம் நான்காம் தலைமுறை வரை விசாரித்து வருகிறவராய் இருக்கிறோம். நம்மிடம் அன்பு கூர்ந்து, நம் கட்டளைகளைக் கைக்கொண்டு ஒழுகிவருகிறவர்களுக்கோ, ஆயிரமாயிரம் தடவையும் தயவு காட்டுவோம்.

உன் கடவுளாகிய ஆண்டவரின் திருப்பெயரை வீணாய்ச்சொல்ல வேண்டாம். ஏனென்றால், ஆண்டவர் தம்முடைய பெயரை வீணில் சொல்பவனைத் தண்டியாமல் விடமாட்டார்.

ஓய்வு நாளைப் பரிசுத்தமாய்க் கொண்டாட நினைவு கூர்வாயாக. ஆறு நாளும் நீ வேலை செய்து உன் தொழிலுக்கடுத்த காரியங்களை எல்லாம் நடத்துவாயாக. ஏழாம் நாளோ உன் கடவுளாகிய ஆண்டவரின் ஓய்வு நாளாய் இருப்பதனால், அன்று நீயாவது, உன் மகன் மகளாவது, உன் வேலைக்காரன் வேலைக்காரியாவது, உன் மிருகங்கள் அல்லது உன் வாயில்களில் இருக்கிற அந்நியனாவது யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். ஏனென்றால், ஆண்டவர் ஆறு நாளில் விண்ணையும் மண்ணையும் அவற்றிலுள்ள அனைத்தையும் படைத்து, ஏழாம் நாளிலே ஓய்வு கொண்டமையால், ஆண்டவர் ஓய்வு நாளை ஆசீர்வதித்துப் பரிசுத்தமாக்கினார்.

உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கொடுக்கப் போகிற நாட்டிலே நீ நெடுநாள் வாழும் பொருட்டு உன் தந்தையையும் தாயையும் மதித்து நடப்பாயாக.

கொலை செய்யாதிருப்பாயாக.
விபசாரம் செய்யாதிருப்பாயாக.
களவு செய்யாதிருப்பாயாக.
உன் அயலானுக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.
உன் அயலான் வீட்டை விரும்பாதே: அவனுடைய மனைவியையாவது, வேலைக்காரனையாவது, வேலைக்காரியையாவது, மாட்டையாவது, கழுதையையாவது, மேலும் அவனுக்குக் கிடைத்த யாதொன்றையாவது விரும்பாதிருப்பாயாக என்றருளினார்.

# பத்துக்கட்டளைகள்

## சர்வேசுரன் நமக்கு அருளிச்செய்த வேத கற்பனைகள் பத்து

1. உனக்குக் கர்த்தாவான சர்வேசுரன் நாமே, நம்மைத் தவிர வேறு சர்வேசுரன் உனக்கு இல்லாமல் போவதாக.
2. சர்வேசுரனுடைய திருப்பெயரை வீணாகச் சொல்லாதிருப்பாயாக.
3. சர்வேசுரனுடைய ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் அனுசரிக்க மறவாதிருப்பாயாக.
4. பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பாயாக.
5. கொலை செய்யாதிருப்பாயாக.
6. மோகபாவம் செய்யாதிருப்பாயாக.
7. களவு செய்யாதிருப்பாயாக.
8. பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.
9. பிறர் தாரத்தை விரும்பாதிருப்பாயாக.
10. பிறர் உடைமையை விரும்பாதிருப்பாயாக.

## 2. ஆண்டவருக்கு எதிரான வழிபாடுகள்

**∟ அந்நிய தேவர்களை அகற்றிவிட்டு உங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ளுங்கள். ஆதி(தொ.நூ) 35:1-2**

அப்பொழுது கடவுள் யாக்கோபை நோக்கி: நீ எழுந்து பெத்தெலுக்குப் போய் அங்கே குடியிரு. உன் அண்ணன் எசாயூவுக்கு அஞ்சி ஓடிய போது உனக்குத் தோன்றின கடவுளுக்கு (அவ்விடத்தில்) ஒரு பீடத்தைக்கட்டு என்றார். அதைக் கேட்டு யாக்கோபு தன் வீட்டார் அனைவரையும் அழைத்து: உங்களுக்குள் இருக்கிற அந்நிய தேவர்களை அகற்றிவிட்டு உங்களைத் தூய்மைப்படுத்தி உங்கள் உடைகளை மாற்றக்கடவீர்கள்.

**∟ விக்கிரகங்களை உனக்கெனச் செய்யாதே. யாத்(விப) 20:22,23**

அப்பொழுது ஆண்டவர் மோயீசனை நோக்கி: நீ இஸ்ராயேல் மக்களிடம் சொல்ல வேண்டியதாவது: நாம் வானத்திலிருந்து உங்களோடு பேசினதாக உங்களுக்குத் தெரியும். நீங்கள் வெள்ளியாலேனும், பொன்னாலேனும் விக்கிரகங்களை உங்களுக்கு உண்டாக்கிக்கொள்ள வேண்டாம்.

**∟ ஆண்டவருக்கே வழிபாடு. யாத் (விப) 22:20**

ஆண்டவர் ஒருவருக்கேயன்றி வேறு தேவர்களுக்கு வழிபாடு செய்கிறவன் கொல்லப்படுவான்.

**∟ அந்நிய தெய்வங்களின் பெயரை நாவால் உச்சரியாதே.**

**யாத் (விப) 23:13**

நாம் உங்களுக்குச் சொன்னதெல்லாம் அனுசரியுங்கள். மேலும், அந்நிய தெய்வங்களின் பெயரைக்கொண்டு ஆணையிடாதீர்கள். உங்கள் வாயினின்று அது யாராலேயும் கேட்கப்படலாகாது.

**∟ நம்மை மட்டுமே தொழுதால் ஆசீர் பெறுவாய்.**

**யாத் (விப) 23:24-26**

நீ அவர்களுடைய தெய்வங்களை ஆராதிக்கவும் தொழவும் வேண்டாம். அவர்கள் செய்கைகளை நீங்கள் பின்பற்றாமல் அவர்களை அடியோடு அழித்து, அவர்களின் சிலைகளையும் உடைத்துப் போடுவீர்கள். உங்கள் கடவுளாகிய ஆண்டவரை நீங்கள் தொழுது வந்தால், நீங்கள் உண்ணும் அப்பத்தையும், குடிக்கும் நீரையும் நாம் ஆசீர்வதித்து நோயை உங்களிடமிருந்து விலகச் செய்வோம். உன் நாட்டிலே வறட்டு மலடிகள் இரார்; உன் வாழ்நாளை நிறைவுபடுத்தி வருவோம்.

**∟ அந்நிய தெய்வ வழிபாடு உனக்கே இடறலானது.**

**யாத் (விப) 23:31-33**

செங்கடல் தொடங்கிப் பிலிஸ்தியரின் கடல் வரையிலும், பாலைவனம் தொடங்கி நதிவரையிலும் உன் எல்லைகளை விரியச் செய்வோம். நாம் அந்நாட்டுக் குடிகளை உங்கள் கையில் ஒப்புவிப்போம். அவர்களோடும் அவர்களுடைய தெய்வங்களோடும் நீ உடன்படிக்கை செய்யாதே. நமக்கு விரோதமாய்ப் பாவம் செய்யும்படி உன்னை அவர்கள் செய்துவிடா வண்ணம், அவர்கள் உன் நாட்டிலே குடியிருக்க வேண்டாம். நீ அவர்களுடைய தெய்வங்களைத் தொழுதால், அது உனக்கு இடறுகல்லாய் இருக்கும் (என்றருளினார்).

**L வணங்காக் கழுத்துள்ளோரை நமது கோபம் அழித்தொழிக்கும். யாத் (விப) 32:7-10**

ஆண்டவரோ மோயீசனுக்குத் திருவாக்கருளி: இறங்கிப் போ. நீ எகிப்து நாட்டினின்று விடுதலையாக்கிய உன் மக்கள் பாவம் செய்தார்கள். நீ அவர்களுக்குக் காண்பித்த வழியை அவர்கள் எவ்வளவு விரைவாய் விட்டு விலகி, தங்களுக்கு வார்ப்பினால் கன்றுக்குட்டியொன்றைச் செய்து ஆராதித்து, பின் அதற்குப் பலியிட்டு: இஸ்ராயேலே! உன்னை எகிப்து நாட்டினின்று விடுதலையாக்கிய உன் தேவர்கள் இவர்களேயாம் என்று சொன்னார்கள் என்றார். மீண்டும் ஆண்டவர் மோயீசனோடு பேசி: இந்த மக்களைப் பார்த்தோம். அவர்கள் வணங்காக் கழுத்துள்ள மக்கள் ஆகையால், நீ நம்மை விட்டுவிடு, நமது கோபம் அவர்கள் மேல் மூண்டு அவர்களை அழித்தொழிக்கும். உன்னை ஒரு பெரிய இனத்திற்குத் தலைவனாக்குவோம் என்றார்.

**L நினைவுத்தூண் வேண்டாம். லேவி 26:1**

உங்கள் கடவுளாகிய ஆண்டவர் நாமே. உங்களுக்கு விக்கிரகங்களையும் கொத்துவேலை உருவங்களையும் செய்து கொள்ளாமலும், நினைவுத்தூண் முதலியன நாட்டாமலும், உங்கள் நாட்டில் தொழுவதற்கான சிறப்புள்ள கல்லை நிறுத்தாமலும் இருப்பீர்களாக. ஏனென்றால் உங்கள் கடவுளாகிய ஆண்டவர் நாமே.

**L சாபத்துக்கு உள்ளாகாதபடி விக்கிரகங்களைப் புறக்கணி. உபா (இச) 7:25,26**

அவர்களுடைய சித்திர வேலைப்பாடுள்ள விக்கிரகங்களை நெருப்பால் சுட்டெரிக்கக்கடவாய். அவைகள் உன் கடவுளாகிய ஆண்டவருக்கு

அருவருப்பானவைகளாகையால், நீ படுகுழியில் விழாதபடிக்கு, அவைகளில் இருக்கிற வெள்ளியையும் பொன்னையும் விரும்பாமலும், அவற்றில் கொஞ்சமேனும் எடுத்துக்கொள்ளாமலும் இருப்பாயாக. அந்த விக்கிரகங்களைப் போல் நீ சாபத்துக்கு உள்ளாகாதபடிக்கு, அவைகளில் யாதொன்றையும் உன் வீட்டிற்குக் கொண்டு போகத் துணியாதே. அது சாபத்துக்கேற்ற பொருளாதலால், நீ விக்கிரகத்தை அசுத்தமென்றும், தீட்டுள்ள அழுகலென்றும் வெறுத்து, அருவருத்துப் புறக்கணிக்கக்கடவாய்.

உங்களுக்கு நாற்புறத்திலுமிருக்கிற பிற மக்களின் கடவுளரைப் பின்பற்றாதிருப்பீர்களாக. **உபா (இச) 6:14**

- **விக்கிரகங்களின் இடங்களையும் வெறுக்கிறோம்.**
**உபா (இச) 12:2,3**

நீங்கள் கைப்பற்றவிருக்கும் மக்கள் உயர்ந்த மலைகளின் மேலும் குன்றுகளின் மேலும் தழைத்திருக்கிற மரங்களின் கீழும் தங்கள் தேவர்களைத் தொழுதுவரும் இடங்களையெல்லாம் அழித்து, அவர்களின் பலி பீடங்களையும் இடித்து, அவர்களின் விக்கிரகங்களையும் தகர்த்து சோலைகளையும் நெருப்பினாலே சுட்டெரித்து, அவர்கள் சிலைகளையும் நொறுக்கி, அவ்விடங்களின் பெயர் முதலாய் இராமல் அவைகளை முற்றிலும் அழித்து விடுங்கள்.

- **அந்நிய சமயச்சடங்குமுறைகளை உன் ஆராதனையில் உபயோகிக்காதே.** **உபா (இச) 12:30-32**

அம்மக்கள் உன் வருகையால்தானே அழிக்கப் பட்டதை நினைவுகூர்ந்து நீ அவர்களைப் போல நடக்காதபடிக்கும்; அவர்கள் தங்கள் தேவர்களுக்குப் பணிவிடை செய்ததுபோல் நானும் செய்வேன் என்று சொல்லி

அவர்களுடைய சமயச் சடங்குகள் எப்படிப்பட்டவை என்று விசாரிக்காதபடிக்கும் எச்சரிக்கையாய் இருக்கக்கடவாய். அப்படிப்பட்ட சடங்குகளைச் செய்து நீ உன் கடவுளாகிய ஆண்டவருடைய ஆராதனையில் உபயோகிக்காதே. ஏனென்றால், ஆண்டவருக்கு வெறுப்பான யாவையும் அவர்கள் தங்கள் தேவர்களுக்குச் செய்து, தங்கள் புதல்வர்களையும், புதல்வியர்களையும் படைத்து நெருப்பிலே அவர்களைச் சுட்டெரித்தார்கள். நான் உனக்கு விதிக்கிற யாவையும் நீ ஆண்டவருக்காகச் செய். அதிலே கூட்டவேண்டியதோ குறைக்கவேண்டியதோ ஒன்றுமில்லை.

## L நம் பார்வைக்கு விருப்பமானதையே செய்.

**உபா (இச) 13:1-18**

உங்களுக்குள்ளே தீர்க்கதரிசியேனும் தான் கனவு கண்டதாகச் சாதிக்கிறவனேனும் தோன்றி, உங்களுக்கு யாதொரு அடையாளத்தை அல்லது அற்புதமான சில காரியத்தை முன்னறிவிக்கலாம். பிறகு அவன் சொல்லியபடி நடந்ததென்றால், அவன்: வா; நீ அறியாத வேறு தேவர்களைப் பின்பற்றி அவர்களுக்குப் பணி செய்வோம் என உனக்குச் சொல்லலாம். நீ அப்படிப்பட்ட தீர்க்கதரிசியேனும் கனவுக்காரனேனும் சொல்லுகிற பேச்சுக்களைக் கேளாதே. ஏனென்றால், உங்கள் கடவுளாகிய ஆண்டவரை நீங்கள் முழு இதயத்தோடும் முழு ஆன்மாவோடும் நேசிக்கிறீர்களோ அல்லவோவென்று வெளிப்படையாய்த் தெரியும்படி அவர் உங்களைச் சோதிக்கிறார்.

நீங்கள் உங்கள் கடவுளாகிய ஆண்டவரை மட்டுமே பின்பற்றி, அவருக்கு அஞ்சுகிறவர்களுமாய் அவருடைய கட்டளைகளை அனுசரிக்கிறவர்களுமாய், அவருடைய வார்த்தைக்குச் செவி கொடுக்கிறவர்களுமாய், அவருக்கு மட்டுமே ஊழியம் செய்து, அவரோடு ஒன்றித்திருக்கக் கடவீர்கள்.

அந்தத் தீர்க்கதரிசி அல்லது கனவுக்காரன் கொலை செய்யப் படக்கடவான். ஏனென்றால், உங்களை எகிப்து நாட்டிலிருந்து விடுதலை செய்தவரும், அடிமை வாழ்வினின்று மீட்டவருமாகிய உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடமிருந்து உன்னை நீக்கவும், உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கற்பித்த நெறியினின்று உன்னை வழுவச் செய்யவும் கருதி அவன் பிதற்றினவனாகையால், நீங்கள் அப்படிப்பட்ட தீமையினின்று விலகக் கடவீர்கள்.

உன் தாய்க்குப் பிறந்த உன் சகோதரனேனும், உன் புதல்வன் புதல்வியேனும், உன் மார்புக்குரிய உன் மனைவியேனும், உன் ஆன்மாவைப்போல் நேசிக்கிற உன் நண்பனேனும் மறைவாய் வந்து: நீ வா; நீயும் உன் முன்னோரும் அறிந்திராத தேவர்களைத் தொழுவோம். அந்தத் தேவர்களே கிட்டத்திலும் தூரத்திலும் எங்கே பார்த்தாலும் நாட்டின் ஒரு முனைதொடங்கி மறுமுனை மட்டும் எல்லா மக்களுக்கும் தேவர்கள் என்று சொல்லி (உன்னை அழைத்தாலும்), நீ அவனுக்கு இணங்காதே; அவன் பேச்சுக்குச் செவி கொடுக்காதே; அவனைக் கருணைக் கண்ணாலே பார்த்து அவனைக் காக்க வேண்டுமென்று அவன் மேல் இரக்கம் வைக்காதே. உடனே அவனைக் கொன்றுவிடு. முதலில் உன் கையும், பின்பு மக்களனைவரின் கைகளும் அவன் மேல் படவேண்டும். கல்லால் எறியப்பட்டு அவன் சாகக்கடவான். ஏனென்றால், அடிமை வாழ்வாகிய எகிப்து நாட்டிலிருந்து உன்னை விடுதலை செய்த உன் கடவுளாகிய ஆண்டவரை நீ விட்டு விலகும்படி அவன் உன்னை ஏவப் பார்த்தான். அதனாலே இஸ்ராயேலர் யாவரும் அதைக் கேள்வியுற்று அஞ்சி இனிமேல் இப்படிப்பட்ட கொடுமையைச் செய்யாதிருப்பார்கள்.

உன் கடவுளாகிய ஆண்டவர் நீ வாழும்படி உனக்குக் கொடுக்கவிருக்கும் நகரங்கள் யாதொன்றில், பேலியாலின் மக்கள் புறப்பட்டுத் தங்கள் நகரத்தின் குடிகளை

நோக்கி: நீங்கள் அறியாத வேறு தேவர்களுக்குப் பணிவிடை செய்யப்போகிறோம்; நீங்களும் வாருங்கள் என்று சொல்லி மேற்கூறிய நகரத்தாரை வஞ்சித்ததாக நீ கேள்விப்படுவாயேயாகில், நீ கவனத்தோடும் சுறுசுறுப்போடும் அதை விசாரித்துக் கேட்டு ஆராய்ந்த பிற்பாடு, அந்தச் செய்தி உண்மைதானென்றும், வெறுக்கத்தக்க அந்தச் செயல் உன் நடுவே நடந்தது உண்மையும் நிச்சயமுமான தென்றும் நீ காண்பாயாயின், உடனே நீ அந்த நகரத்துக் குடிகளைக் கருக்கு வாளினால் வெட்டி, அந்நகரத்தையும் அழித்து, அதிலுள்ள யாவற்றையும், அதில் இருக்கிற மிருகவுயிர்களையும் அழித்து, (அதில் கொள்ளையிடப்பட்ட) சாமான் தட்டுமுட்டு முதலியவற்றை நடு வீதியிலே கூட்டிக் குவித்து, அவற்றையும் நகரத்தையும்கூட சுட்டெரித்து, உன் கடவுளாகிய ஆண்டவருக்குப் புகழ்ச்சியாக முழுவதும் நெருப்புக்கு இரையாகும்படியாகவும், அது இனி ஒருகாலும் கட்டப்படாமல் நித்திய கல்மேடாய் இருக்கும்படியாகவும் செய்யக்கடவாய். சபிக்கப்பட்ட பொருட்களில் யாதொன்றையும் நீ கையில் எடுக்காதே. அப்போதுதான் ஆண்டவர் தமது கடுங்கோபத்தை விட்டு, உன்மேல் இரங்கி, உன் மூதாதையருக்கு ஆணையிட்டுச் சொல்லியபடி உன்னை விருத்தியடையச் செய்வார். (இந்த வார்த்தை நிறைவேறுவதற்கு) நீ உன் கடவுளாகிய ஆண்டவரின் குரலொலிக்குச் செவி கொடுத்து, அவருடைய கட்டளைகளையெல்லாம் நீ கைக்கொண்டு அனுசரிக்க வேண்டும். உன் கடவுளாகிய ஆண்டவருடைய பார்வைக்கு விருப்பமானதை நீ செய்யும்படியாகவே நான் இன்று மேற்கூறிய கட்டளைகளை உனக்கு விதித்திருக்கிறேன்.

**L என்னை மறுதலிக்காதபடி கவனமாயிருங்கள்.**

**உபா (இச) 29:16-18**

உள்ளபடி நாம் எகிப்து நாட்டில் குடியிருந்ததையும் நாம் கடந்து வந்த இடங்களிலிருந்த மக்களின் நடுவில் நடந்து வந்ததையும், அப்பொழுது, அவர்களுடைய அருவருப்புகளையும், அவர்கள் கும்பிட்டு ஆராதிக்கிற மரமும் கல்லும் வெள்ளியும் பொன்னுமாகிய நரகலான விக்கிரகங்களையும் நீங்கள் கண்ணாலே கண்டீர்கள். ஆகையால் அந்த மக்களின் தேவர்களை கும்பிடத் தக்கவர்களென்று மதித்து, நம் கடவுளாகிய ஆண்டவரை விட்டு மறுதலிக்கும் மனத்தையுடைய ஓர் ஆடவனேனும் ஒரு பெண்ணேனும் குடும்பமேனும் வம்சமேனும் உங்களிடையே இராதபடிக்கும், உங்களுக்குள்ளே பித்தையும் கைப்பையும் விளைவிக்கத்தக்க வேர் போன்றவர்கள் இராதபடிக்கும் பார்த்துக் கொள்ளுங்கள்.

**L அந்நிய தேவர்களை வணங்கி நம் கோபத்தைத் தூண்டாதே.** **உபா (இச) 32:15-18**

அன்பு செய்யப்பட்ட (மகன்) கொழுத்துப்போய் உதைக்கத் தொடங்கினான். அவன் கொழுத்துப் பருத்தபோது, தன்னைக் காக்கும் கடவுளுக்கு முதுகைக் காட்டி விலகினான். அந்நிய தேவர்களை வணங்கியதனாலே அவர்கள் அவருக்கு எரிச்சலை மூட்டி, அருவருப் பானவைகளால் அவரது கோபத்தைத் தூண்டிவிட்டார்கள். அவர்கள் கடவுளுக்குப் பலியிடுவதை விட்டு, தாங்கள் அறியாத தேவர்களாகிய பேய்களுக்கே பலியிட்டார்கள். புதிதாய்த் தோன்றிய, தங்கள் மூதாதையர் கும்பிடாத, புதுத் தெய்வங்களுக்கே (வழிபாடு செய்தார்கள்). உன்னைப் பெற்ற கடவுளை விட்டு, உன்னை உருவாக்கிய ஆண்டவரை மறந்து விட்டாயே!

**L நம்மையன்றி வேறு தெய்வம் இல்லை. இசை (எசா) 44:6-8**

இஸ்ராயேலின் மாமன்னரும், அதன் மீட்பரும், சேனைகளின் ஆண்டவருமாகிய ஆண்டவர் கூறுகிறார்: “முதலும் நாமே, முடிவும் நாமே; நம்மையன்றி வேறு தெய்வம் இல்லை. நமக்குச் சமமானவன் யார்? அறிவிக்கட்டும்; எடுத்துக்காட்டி எண்பிக்கட்டும்; நடக்கப் போகின்றவற்றை முதலிலிருந்தே முன்னறிவித்தவன் யார்? வரப்போவதை இப்பொழுதே நமக்கு அறிவிக்கட்டும்! நீங்கள் கலங்காதீர்கள், அஞ்சாதீர்கள்; துவக்கத்திலிருந்தே உங்களுக்குச் சொன்னோம், அறிவித்தோம் அன்றோ? நீங்களே நமக்குச் சாட்சிகள்! நம்மையன்றி வேறு தெய்வம் உண்டோ? புகலிடம் வேறில்லை; அப்படியொன்றையும் நாம் அறியோம்.”

**L குயவன் கையில் களிமண் நீ. இசை (எசா) 45:5-9**

நாமே ஆண்டவர், வேறு எவனுமில்லை; நம்மையன்றி வேறு கடவுள் கிடையாது; நம்மை நீ அறியாதவனாயிருந்தும், உனக்குச் சிறப்புப் பெயர் தருவோம். கதிரவன் தோன்றும் திசையிலிருந்து மறையும் திசைவரையில் வாழ்வோர் அனைவரும், நம்மையன்றி வேறில்லையென அறியுமாறு இவ்வாறு செய்தோம். நாமே ஆண்டவர், வேறு எவனுமில்லை. ஒளியை உருவாக்குகிறவரும், இருளைப் படைக்கிறவரும், வாழ்வை வழங்குகிறவரும், தாழ்வைத் தருகிறவரும் நாமே; இவற்றையெல்லாம் செய்கிற நாமே ஆண்டவர். வானமே, மேலிருந்து பனிமழை பெய், மேகங்கள் நீதியைப் பொழிக! நிலம் திறக்கப்படுக! மீட்பு முளைப்பதாக! அதனோடு நீதி தளிர்ப்பதாக! ஆண்டவராகிய நாமே அதைச் செயலாற்றுகிறோம். தன்னை உருவாக்கியவனுடன் வாதாடுகிற மட்கலத்திற்கு ஐயோ கேடு! களிமண் குயவனை நோக்கி, ‘நீ என்ன செய்கிறாய்? உன் வேலைப்பாட்டில் கைத்திறமையில்லை’ என்று சொல்வதுண்டோ?

**∟ அந்நிய தெய்வ வழிபாடு உனக்கே கேடு.**

**எரே 7:5-11**

உங்களுடைய வழிகளையும் செயல்களையும் நீங்கள் உண்மையாகவே திருத்திக்கொண்டால், ஒருவனுக்கும் மற்றொருவனுக்கும் உண்டாகும் வழக்கில் உண்மையாகவே நீதி வழங்கினால், அந்நியரையும் அநாதைகளையும் கைம்பெண்களையும் நீங்கள் ஒடுக்காதிருந்தால், மாசற்ற இரத்தத்தை இவ்விடத்தில் சிந்தாதிருந்தால், உங்களுக்கே தீமையாக வேற்றுத் தெய்வங்களைப் பின்தொடராதிருந்தால், உங்கள் தந்தையர்க்கு முற்காலத்தில் நாம் கொடுத்த இந்த நாட்டில் உங்களோடு என்றென்றும் குடியிருப்போம்.

ஆனால், இதோ உங்களுக்குப் பயன் தராத பொய் வார்த்தைகளை நம்புகின்றீர்கள். களவு, கொலை, விபச்சாரம், பொய்யாணை, பாகாலுக்கு வழிபாடு, நீங்கள் அறியாத வேற்றுத் தெய்வங்களைத் தொழுதல் இவற்றையெல்லாம் செய்து விட்டு, நீங்கள் இங்கு வந்து நம் பெயரால் வழங்கப்படும் இவ்வீட்டில் நம் முன்னிலையில் நின்றுகொண்டு, 'நாங்கள் விடுதலை பெற்றோம்' என்று சொல்லுகிறீர்கள்; சொல்லிக்கொண்டு தொடர்ந்து அதே அருவருப்பான செயல்களைச் செய்கிறீர்கள். என் பெயரால் குறிக்கப்படும் இந்த வீடு உங்கள் கண்களுக்குக் கள்ளர் குகையாய்த் தோன்றுகிறதோ? இதோ நாமே நேரில் பார்த்தோம், என்கிறார் ஆண்டவர்.

**∟ உங்கள் வழிபாட்டால் எனக்குச் சினமூட்டாதீர்கள்.**

**எரே 7:16-20**

"(எரேமியா), நீ இந்த மக்களுக்காக மன்றாட வேண்டாம். இவர்களுக்காக அழுகையோ வேண்டுதலோ செய்ய வேண்டாம்; பரிந்து பேசவும் வேண்டாம்; ஏனெனில் உன்

மன்றாட்டை நாம் கேட்க மாட்டோம். யூதாவின் பட்டணங்களிலும், யெருசலேமின் தெருக்களிலும் இவர்கள் செய்வதை நீ பார்க்கவில்லையா? பிள்ளைகள் விறகுக் கட்டைகளைச் சேர்க்கின்றார்கள்; தந்தையர் அவற்றில் தீ மூட்டுகிறார்கள்; பெண்கள் மாவில் எண்ணெய் விட்டுப் பிசைந்து அப்பம் சுட்டு விண்ணரசிக்கும் வேற்றுத் தெய்வங்களுக்கும் படைக்கிறார்கள்; பானப்பலிகளையும் இடுகிறார்கள். நமக்கோ சினத்தை மூட்டுகிறார்கள். எனக்கு மட்டுமா கோபத்தை மூட்டுகிறார்கள்? தங்களுக்கே அல்லவா வெட்கத்தை வருவித்துக் கொள்கிறார்கள், என்கிறார் ஆண்டவர். ஆகையால் ஆண்டவராகிய இறைவன் கூறுகிறார்: இதோ, நம் சினமும் ஆத்திரமும் இந்த இடத்தின் மேலும், மக்கள் மேலும் மிருகங்கள் மேலும் நாட்டின் மரங்கள் மேலும் பூமியின் பலன்கள் மேலும் காட்டப்படும். அவற்றை அழித்தே தீரும்; அவிக்க முடியாது."

### ∟ புறவினத்தாரின் வழிமுறைகள் யாவும் வீண்.

**எரே 10:1-5**

இஸ்ராயேல் வீட்டாரே, ஆண்டவர் உங்களுக்குச் சொல்லும் வார்த்தையைக் கேளுங்கள்: ஆண்டவர் கூறுகிறார்: "புறவினத்தாரின் நெறிகளை நீங்கள் கற்றுக் கொள்ளாதீர்கள்; அவர்கள் கண்டு அஞ்சும் வானக் குறிகளுக்கு அஞ்ச வேண்டாம்; ஏனெனில் புறவினத்தாரின் வழிமுறைகள் யாவும் வீண்; காட்டில் தச்சன் கோடரியால் ஒரு மரத்துண்டை வெட்டி, வேலை செய்கிறான்; மனிதர் அதனை வெள்ளியாலும் பொன்னாலும் அணி செய்கின்றனர்; கலகலத்து வெவ்வேறாய் விழாதபடி ஆணிகளைத் தைத்து, சுத்தியலால் இணைக்கிறார்கள்; அப்படிச் செய்த சிலைகள் வெள்ளரித் தோட்டத்தில் பறவையோட்ட வைக்கும் பூச்சாண்டிப் பொம்மைகள்; அவை பேச ஆற்றலற்றவை; அவற்றால் நடக்க முடியாது; ஆதலால் மனிதர் அவற்றைத் தூக்கிச் செல்கின்றனர்; அவற்றுக்கு அஞ்ச வேண்டாம்; அவை உங்களுக்கு நன்மையும் செய்யா; தீமையும் செய்யா."

==========================================

## 3. யாக்கோபில் மந்திரவாதிகள் இல்லை

**எண் 23:23**

**L சூனியக்காரரை உயிர்வாழ விடாதே. யாத் (விப) 22:18**

**L குறிசொல்வோன் உங்களுக்குள்ளே இருத்தலாகாது. உபா (இச) 18:10-12**

தன் புதல்வனையேனும் புதல்வியையேனும் சுத்திகரிப்புக்கென்று தீயைக்கடக்கச் செய்பவனும், குறிசொல்லுகிறவர்களிடம் அறிவுரை கேட்பவனும், கனவுகளையும் சகுனங்களையும் நம்புகிறவனும், சூனியக்காரனும் உங்களுக்குள்ளே இருத்தலாகாது. மந்திரவாதியும் சன்னதக்காரனும் மாயவித்தைக்காரனும், இறந்தவர்களிடம் குறிகேட்கிறவனும் (உங்களுக்குள்ளே) இருத்தலாகாது. ஏனென்றால் ஆண்டவர் இவற்றையெல்லாம் வெறுக்கிறார். இப்படிப்பட்ட பாதகங்களின் பொருட்டு அவர் உன் முன்னிலையில் அவர்களை அழித்தொழிப்பார்.

**L மைவித்தை மாயமந்திரக்காரர்களைக் குழப்பிவிடுவோம். இசை (எசா) 19:3**

அவர்களுடைய திட்டங்களை நாம் குழப்பிவிடுவோம்; சிலைகளையும் குறிசொல்பவர்களையும் ஆலோசனை கேட்பார்கள்; மைவித்தைக்காரரையும், மந்திரவாதிகளையும் வழி கேட்பார்கள்.

**L நம் ஊழியனை உறுதிப்படுத்துகிறோம். இசை (எசா) 44:24-26**

நாமே ஆண்டவர், நாமே அனைத்தையும் படைத்தோம்; தனியாகவே வானத்தை விரித்தோம், பூமியை நிலை நாட்டினோம்; நமக்கு உதவினவன் ஒருவனுமில்லை. நிமித்திகர் சொல்லும் குறிகளைப் பொய்யாக்குகிறோம்,

மந்திரவாதிகளை மடையராக்குகிறோம்; ஞானிகளை விழத்தாட்டுகிறோம், அவர்களது அறிவை மடமையாக்குகிறோம். நம் ஊழியனின் வாக்கியத்தையோ உறுதிப்படுத்துகிறோம், நம் தூதர்களின் மொழிகளை நிறைவேற்றுகிறோம்.

**L மந்திரவாதி, சோதிடர் உன்னை மீட்கமுடியுமா?**

**இசை (எசா) 47:8-15**

மென்மையானவளே, கலக்கமின்றி வாழ்பவளே, "நானே தனிப்பெரும் அரசி, என்னையன்றி வேறில்லை; நான் கைம்பெண்ணாய் ஆகமாட்டேன், மலடியாகவும் இருக்கமாட்டேன்" என்று உன் உள்ளத்தில் எண்ணுபவளே, நாம் சொல்வதை இப்போது கேள்: மலட்டுத் தன்மை, கைம்மை இவ்விரண்டும் நொடிப்பொழுதில் ஒரே நாளில் உனக்கு நேரும்; நீ கணக்கற்ற பில்லி சூனியங்களைக் கையாண்டாலும், உன் மந்திரவாதங்களுக்கு மிதமிஞ்சிய ஆற்றலிருப்பினும், இந்தத் தீமைகளெல்லாம் உனக்கு வந்தே தீரும். "என்னைப் பார்க்கிறவர் ஒருவருமில்லை" என்று சொல்லிக் கொண்டு, அஞ்சாமல் கொடுமைகளைச் செய்துவந்தாய்; உன் ஞானமும் உன் கல்வியறிவும் உன்னை மோசஞ் செய்துவிட்டன; நீயோ, "நானே தனிப்பெருந் தலைவி, என்னையன்றி வேறில்லை" என்று உன் உள்ளத்தில் எண்ணினாய். தீமை உன்மேல் திண்ணமாய் வரும், எங்கிருந்து வருமென உனக்குத் தெரியாது; வேதனை உன்மேல் பெருக்கெடுத்து வரும், அதற்குப் பரிகாரம் தேட உன்னால் இயலாது; அழிவு உன்மேல் திடீரென விழும், அதைப்பற்றி ஒன்றும் அறியமாட்டாய். உன் மந்திரவாதிகளோடும், நீ இளமை முதல் உன் தொழிலாய்க் கொண்டிருக்கும் பில்லி சூனியங்களோடும் நின்றுகொள்; அவை உனக்குப் பயன்படுமோ என்றும், அவற்றால் இன்னும் ஆற்றல்

பெறுவாயோ என்றும் பார்ப்போம். உன் ஆலோசனைகளின் எண்ணிக்கையால் சோர்வடைந்தாய், கிரகங்களைக் கணிக்கும் சோதிட நூல் அறிஞரும், நாள் நட்சத்திரத்தை ஆராய்ந்து, எதிர் காலத்தை உனக்குச் சொல்பவரும் இப்போது வரட்டும், வந்து உன்னை மீட்கட்டும் பார்ப்போம். இதோ, அவர்கள் வைக்கோலைப்போல் இருக்கிறார்கள். நெருப்பு அவர்களைச் சுட்டெரிக்கும்; தீயின் அனலினின்று அவர்கள் தங்கள் உயிரை விடுவிக்க மாட்டார்கள்; குளிர்காயப் பயன்படும் தீப்பொறியில்லை இவை, எதிரே உட்காரத்தக்க நெருப்புமில்லை இது. யாரோடு உழைத்துழைத்துச் சோர்ந்தாயோ அவர்களும், இளமை முதல் உன்னோடு வணிகம் நடத்தியவர்களும், ஒவ்வொருவரும் ஒரு திசையில் ஓட்டமெடுப்பர், உன்னை மீட்க ஒருவனும் இருக்கமாட்டான்.

**∟ போலித்தீர்க்கதரிசிகளிடம் மயங்காதீர்கள்.**

**எரே 29:8,9**

ஏனெனில் இஸ்ராயேலின் கடவுளாகிய சேனைகளின் ஆண்டவர் கூறுகிறார்: உங்கள் நடுவிலிருக்கிற உங்கள் தீர்க்கதரிசிகளும் உங்கள் நிமித்திகரும் உங்களை மயக்கா திருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்; அவர்கள் காணும் கனவுகளையும் பொருட்படுத்தாதீர்கள்; ஏனெனில், அவர்கள் நமது பெயரால் உங்களுக்குப் பொய்யைச் சொல்லுகிறார்கள்; நாம் அவர்களை அனுப்பவில்லை, என்கிறார் ஆண்டவர்.

==========================================

# 4. உடலும் ஒழுக்கக்கேடான இச்சைகளும்

**L நிருவாணத்தை வெளிப்படுத்தாதே. லேவி 18:1-30**

ஆண்டவர் மோயீசனை நோக்கி: நீ இஸ்ராயேல் மக்களுக்குச் சொல்ல வேண்டியதாவது: நாம் உங்கள் கடவுளாகிய ஆண்டவர். நீங்கள் முன் குடியிருந்த எகிப்து நாட்டின் வழக்கப்படி ஒழுகவும் வேண்டாம்; நாம் உங்களை அழைத்துப்போகிற கானான் நாட்டாரின் நடத்தைக்கு ஒத்த வண்ணம் நடக்கவும் வேண்டாம். அவர்களுடைய முறைமைகளைக் கைக்கொள்ளவும் வேண்டாம். நமது நீதி முறைகளின்படி நடந்து, நம்முடைய கட்டளைகளை நிறைவேற்றி, நம்முடைய சட்ட நெறியின்படி ஒழுகக் கடவீர்களாக. ஆண்டவராகிய நாமே உங்கள் கடவுள். நமது கட்டளைகளையும் நீதி நெறிகளையும் கைக்கொள்ளக் கடவீர்கள். அவைகளின்படி நடப்பவன் அவைகளால் வாழ்வு பெறுவான். எந்த மனிதனாயினும் தனக்கு நெருங்கின உறவுள்ள பெண்ணைச் சார்ந்து, அவளுடைய நிருவாணத்தை வெளிப்படுத்தலாகாது. நாம் ஆண்டவர். உன் தந்தையின் நிருவாணத்தையும் உன் தாயின் நிருவாணத்தையும் நீ வெளிப்படுத்த வேண்டாம். அவள் உன் தாயென்று (மதித்து), அவளுடைய நிருவாணத்தை வெளிப்படுத்தலாகாது. உன் தந்தையினுடைய மனைவியின் நிருவாணத்தையும் வெளிப்படுத்தலாகாது. அவளுடைய நிருவாணம் உன் தந்தையின் நிருவாணமே. உன் தந்தைக்கோ தாய்க்கோ வீட்டிலேயாவது வெளியிலேயாவது பிறந்த புதல்வியாகிய உன் சகோதரியின் நிருவாணத்தை வெளிப்படுத்தலாகாது. உன் புதல்வனுடைய மகளின் நிருவாணத்தையோ, உன் புதல்வியின் மகளுடைய நிருவாணத்தையோ வெளிப்படுத்தலாகாது. அவளுடைய நிருவாணம் உன்னுடைய நிருவாணமே. உன் தந்தையினுடைய மனைவியின் வயிற்றில்

அவனுக்குப் பிறந்த புதல்வி அவள் உனக்குச் சகோதரியே. உன் தந்தையின் சகோதரியின் நிருவாணத்தை வெளிப்படுத்தலாகாது. ஏனென்றால், அவளுடைய மாமிசமும் உன் தந்தையின் மாமிசமும் ஒன்றுதான். உன் தாயின் சகோதரியின் நிருவாணத்தை வெளிப்படுத்தலாகாது. ஏனென்றால், அவளுடைய மாமிசமும் உன் தாயின் மாமிசமும் ஒன்றுதான். உன் தந்தையின் சகோதரனின் நிருவாணத்தை வெளிப்படுத்தலாகாது. அவன் மனைவியோடு சேரலும் ஆகாது. ஏனென்றால், அவளுக்கும் உனக்கும் உறவு உண்டு. உன் மருமகளுடைய நிருவாணத்தையும் வெட்கத்தையும் வெளிப்படுத்தலாகாது. ஏனென்றால், அவள் உன் மகனின் மனைவி. உன் சகோதரனுடைய மனைவியின் நிருவாணத்தை வெளிப்படுத்தலாகாது. ஏனென்றால், அவளுடைய நிருவாணம் உன் சகோதரனுடைய நிருவாணமே. உன் மனைவியினுடைய நிருவாணத்தை ஒருவருக்கும் காட்டலாகாது. அவள் புதல்வியின் நிருவாணத்தையும் வெளிப்படுத்தலாகாது. அவளுடைய புதல்வனின் மகளின் நிருவாணத்தையும் வெளிப்படுத்தலாகாது. ஏனென்றால், இவர்கள் அவளுக்கு நெருங்கிய உறவு. அது முறைகேடு. உன் மனைவி இருக்கையில், அவளோடு கூட அவளுடைய சகோதரியையும் மனைவியாகக் கொண்டு அவளுடைய நிருவாணத்தை வெளிப்படுத்தலாகாது. மாதவிடாயுள்ள பெண்ணோடு சேர்ந்து, அவள் அசுத்தத்தை வெளிப்படுத்தலாகாது. பிறனுடைய மனைவியோடு படுத்தலாகாது. அவளோடு சேர்ந்து, இரத்தக் கலப்பினால் உன்னைத் தீட்டுப் படுத்தலாகாது. உன் பிள்ளைகளில் எவனையும் மொலோக் விக்கிரகத்திற்கு நேர்ந்து கொள்ளும்படி கொடுக்கவும் கூடாது; உன் கடவுளுடைய திருப்பெயரை இழிவுபடுத்தவும் கூடாது. நாமே ஆண்டவர். பெண்ணோடு சேர்க்கை கொள்வது போல் ஆணோடு சேர்க்கை கொள்ளாதே. அது வெறுப்புக்குரிய தீச்செயல். எந்த மிருகத்தோடும் நீ புணர்ச்சி செய்து,

அதனால் உன்னைத் தீட்டுப்படுத்தலாகாது. மிருகத்தோடு புணரும்படி எந்தப் பெண்ணும் அதற்குத் தன் மடியை வெளிப்படுத்தலாகாது. அது பெரும் தீச்செயல் அல்லவா?

நாம் உங்கள் முன்னின்று துரத்தப் போகிற எல்லா இனத்தாரும் இப்படிப்பட்டவைகளால் தங்களை மாசுபடுத்தியிருக்கிறார்கள். நீங்கள் அவைகளில் ஒன்றினாலும் உங்களைத் தீட்டுப்படுத்தாதிருங்கள். அப்படிப்பட்ட தீச் செயல்களால் அவர்களுடைய நாடும் தீட்டுப்படுத்தப் பட்டது. ஆதலால், அதன் பாவங்களை நாம் விசாரிப்போம். இந்நாடும் தன் குடிகளைக் கக்கிப்போடும்படி செய்வோம். நீங்களோ நமது கட்டளைகளையும் நீதி நெறிகளையும் கைக்கொண்டு, வெறுப்புக்குரிய அத்தீச் செயல்களில் ஒன்றையும் செய்யாதீர்கள். குடிமகனும் அந்நியனும் அவற்றை விலக்கக் கடவார்கள். உங்களுக்கு முன்னிருந்த இந்நாட்டுக் குடிகள் வெறுக்கத்தக்க மேற்சொன்ன தீச்செயல்களையெல்லாம் செய்து தங்கள் நாட்டைத் தீட்டுப்படுத்தினார்கள். ஆகையால், நீங்கள் அப்படிப்பட்டவைகளைச் செய்தால், நாடு முன்பே தன் குடிகளைக் கக்கினது போல் உங்களையும் கக்கிப் போடுமென்று எச்சரிக்கையாய் இருங்கள். மேற்சொன்ன வெறுப்புக்குரிய தீச்செயல்களில் எவற்றையேனும் செய்பவன் தன் இனத்திலிருந்து விலக்குண்டு போகக் கடவான். நமது கட்டளைகளைக் கைக்கொள்ளுங்கள். உங்களுக்கு முன் இருந்தவர்கள் செய்த தீச்செயல்களை நீங்களும் செய்து, அவற்றாலே தீட்டுப்படாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். நாம் உங்கள் கடவுளாகிய ஆண்டவர் என்றார்.

**∟ உடலையும் ஆத்துமத்தையும் கொல்லும் பாவங்கள்.**

**எசே 22:9-12**

இரத்தத்தைச் சிந்தும் அக்கிரமிகள் உன்னில் இருக்கிறார்கள்; மலைகளின்மேல் படைக்கப்பட்டதை உண்ணுகிறார்கள்; உன் நடுவில் அக்கிரமம் செய்யத் துணிகிறார்கள்; தங்கள் தந்தையின் நிருவாணத்தை வெளிப்படுத்துகிறவர்களும், தீட்டுப்பட்ட (வீட்டுக்கு விலக்கான - menses) பெண்களைப் பலவந்தப் படுத்துகிறவர்களும் உன்னில் உள்ளனர். ஒருவன் தன் அயலான் மனைவியைக் கெடுக்கிறான்; இன்னொருவன் தன் மருமகளைக் கெடுத்துக் கற்பழிக்கிறான்; மற்றொருவன் சொந்தத் தந்தைக்குப் பிறந்த தன் உடன் பிறந்த சகோதரியை முறைகேடாய்க் கெடுக்கிறான். உன்னில் பலர் கொலை செய்ய இலஞ்சம் வாங்குகிறார்கள்; நீ வட்டி வாங்குகிறாய்; கொடுத்ததற்கு அதிகமாய்த் திரும்பப் பெறுகிறாய்; பொருளாசையால் அயலானை ஒடுக்குகிறாய்; நம்மை மறந்துவிட்டாய், என்கிறார் ஆண்டவராகிய இறைவன்.

**∟ அடங்காக் காம இச்சை கொண்டோரைத் தண்டிப்போம்.**

**எரே 5:7-9**

உங்கள் மக்கள் நம்மைக் கைவிட்டார்கள்; கடவுளல்லாதவர்கள் பேரால் ஆணையிட்டார்கள்; நாம் அவர்களை வயிறார உண்பித்தோம்; அவர்கள் விபசாரம் பண்ணினார்கள்; விலைமாதர் வீடுகளுக்குக் கூட்டங் கூட்டமாய்ப் போனார்கள். குறையின்றித் தீனி தின்னும் அடங்காக் குதிரைகள் போல் ஒவ்வொருவனும் தன் இனத்தான் மனைவியின் பின்னே கனைக்கிறான். இந்த அக்கிரமங்களுக்காக அவர்களைத் தண்டிக்க மாட்டோமா? இத்தகைய மக்கள்மேல் பழிதீர்த்துக் கொள்ளாமல் விடுவோமா? என்கிறார் ஆண்டவர்.

**L பிறர் அழகில் மயங்கிக் கெட்டழிந்து போகாதே.**

**சீரா (சீஞா) 9:5-12**

இளமங்கையின் அழகினால் நீ கெட்டுப் போகாதபடி அவளைக் கண்ணோக்காதே. எக்காரியத்திலும் விலைமாதருக்கு உன் மனத்தைப் பறிகொடாதே. ஏனென்றால், உன்னையும் உன் சொத்துகளையும் இழந்து போவாய். நகரின் தெருக்களில் சுற்றிப் பார்க்காதே; அதன் மைதானங்களில் திரியாதே. தன்னைத் தானே அழகுபடுத்தித்திரியும் பெண்ணினின்று உன் முகத்தைத் திருப்பிக்கொள். அழகுள்ள அன்னிய பெண்ணை நோக்காதே. பெண்ணின் அழகினால் பலர் கெட்டழிந்துள்ளார்கள்; அதனால் ஆசையுணர்வு நெருப்பைப்போல் பற்றி எரிகின்றது. வேசியாய்த் திரியும் எவளும் பாதையிலுள்ள சகதியைப்போல் மிதிக்கப்படுவாள். பிறன் மனைவியின் அழகைக் கண்டு அதிசயித்தவர்கள் பலர் தள்ளுண்டு போனார்கள். ஏனென்றால், அவள் உரையாடல் நெருப்பைப்போல் எரிகின்றது. பிறன் மனைவியோடு ஒருபோதும் உட்கார்ந்திராதே.

**L இச்சைக்கு அடிமையானவன் நிறைவுகொள்வதில்லை.**

**சீரா 23:23-24 (சீஞா 23:16-17)**

உடலின் தீய ஆசையுணர்வுகளுக்குத் தன்னை அளிக்கும் நெறிகெட்டவன், இவைகளின் வேகம் தணியும் வரைக்கும் தீ நெறியை விடான். விபசாரனுக்கு அப்பமெல்லாம் இனிப்பானதுதான். அவன் சாகிற வரைக்கும் பாவவழியில் நடந்தாலும் களைத்துப் போவதில்லை.

**L இச்சையுடன் நோக்காதே. மத் 5:28**

ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்குபவன் எவனும், ஏற்கெனவே தன்னுள்ளத்தில் அவளோடு விபசாரம் செய்தாயிற்று.

**L உள்ளத்திலிருந்து வருவதே ஒருவனை மாசுபடுத்தும்.**

**மாற் 7:20-23**

"மனிதனுள்ளிருந்து வருவதே அவனை மாசுபடுத்தும். ஏனெனில், மனிதர் உள்ளத்தினின்றே தீய எண்ணம், மோகம், களவு, கொலை, விபசாரம், பேராசை, தீச்செயல், கபடு, கெட்ட நடத்தை, பொறாமை, பழிச்சொல், செருக்கு, மதிகேடு ஆகியவை வெளிவரும். இத்தீயவை யாவும் உள்ளத்திலிருந்து வந்து மனிதனை மாசுபடுத்தும்."

**L தவிர்க்க வேண்டியவைகளுள் சில.**

**அப். பணி (திப) 15:28,29**

பரிசுத்த ஆவியும் நாமும் கூறும் தீர்மானம் இதுவே: இன்றியமையாதவை தவிர, எச்சுமையும் உங்கள்மேல் சுமத்தப் படலாகாது. சிலைகளுக்குப் படைத்தது, மிருக இரத்தம், மூச்சடைத்துச் செத்ததின் இறைச்சி இவற்றை உண்ணாமலிருப்பதோடு, கெட்ட நடத்தையிலிருந்து விலகி நில்லுங்கள். இவற்றைத் தவிர்த்தலே முறை.

**L ஒழுக்கக்கேடான இச்சை சாவுக்குரியது.**

**உரோ 1:25-32**

ஏனெனில், அவர்கள் கடவுளின் உண்மையைப் பொய்யாக மாற்றினர்; படைப்புப் பொருட்களுக்கு வழிபாடும் ஊழியமும் செய்தனர்; படைத்தவரை மறந்தனர்; அவரே என்றென்றும் போற்றுதற்குரியவர். ஆமென். ஆதலால், கடவுள் அவர்களை வெட்கக் கேடான இச்சைகளுக்குக் கையளித்துவிட்டார். பெண்கள் இயல்பான முறையை விட்டு, இயல்புக்கு மாறாக நடந்து கொண்டனர். அவ்வாறே ஆண்களும் பெண்களோடு சேரும் இயல்பான முறையை விட்டு, ஒருவர்மீது ஒருவர் வேட்கை கொண்டு காமத்தீயால் பற்றி எரிந்தனர்; ஆண்கள் ஆண்களுடன் இழிவான செயல்களைச் செய்து தங்கள் ஒழுக்கக் கேட்டுக்கு ஏற்ற கூலியைத் தங்களிலேயே பெறுபவர் ஆயினர்.

கடவுளை அறிந்து ஏற்பதன் தகைமையை அவர்கள் மறுத்ததால் தகாதவற்றைச் செய்யும்படி அவர்களைக் கடவுள் அவர்களின் சீர்கெட்ட சிந்தைக்குக் கையளித்து விட்டார். அவர்களோ, எல்லாவகையான அநியாயம், கெடுமதி, பேராசை, தீய மனம் நிறைந்தவர்கள் ஆயினர்; அவர்கள் பொறாமை, கொலை, சண்டை, கபடம், வஞ்சகம்மிக்கவர்கள்; புறங்கூறுபவர்கள்; அவதூறு பேசுபவர்கள், கடவுளை வெறுப்பவர்கள், மூர்க்கர்கள், இறுமாப்புடையவர்கள், வீண்பெருமை பாராட்டுபவர்கள், தீமை சூழ்வதில் திறமை வாய்ந்தவர்கள், பெற்றோருக்கு அடங்காதவர்கள், வாக்குத்தவறுபவர்கள். அவர்களுக்கு அறிவு இல்லை, அன்புணர்ச்சி இல்லை, இரக்கம் இல்லை; இப்படியெல்லாம் நடப்பவர்கள் சாவுக்குரியவர்கள் என்னும் கடவுளுடைய நியமத்தை அறிந்திருந்தும் இவ்வாறு நடக்கின்றனர்; தாங்கள் நடப்பது மட்டுமன்று, அப்படி நடப்பவர்களுக்குப் பாராட்டும் அளிக்கின்றனர்.

**L ஊனியல்பின் செயல்கள் விண்ணரசுக்குப் புறம்பானது.**

**கலா 5:19-21**

ஊனியல்பின் செயல்கள் யாவர்க்கும் தெரிந்தவையே. அவை பின்வருமாறு: கெட்ட நடத்தை, அசுத்தம், காமவெறி, சிலைவழிபாடு, பில்லிசூனியம், பகைமை, சண்டை சச்சரவு, பொறாமை, சினம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம் முதலியவை. இத்தகையவற்றில் ஈடுபடுவோர்க்குக் கடவுளின் அரசு உரிமையாகாது.

# 5. ஆசீர்வாதங்களும் சாபங்களும்

**I. ஆசீர்வாதங்கள் உபா (இச) 28:1-14**

உன் கடவுளாகிய ஆண்டவருடைய குரலொலிக்கு நீ செவிகொடுத்து, நான் இன்று உனக்குக் கற்பிக்கின்ற அவருடைய கட்டளைகள் யாவையும் கைக்கொண்டு ஒழுகுவாயாகில், உன் கடவுளாகிய ஆண்டவர் பூமியிலுள்ள எல்லா இனத்தாரைக்காட்டிலும் உன்னை மேன்மைப்படுத்துவார். நீ அவருடைய கட்டளைகளுக்கு அடங்கி நடந்தால் (இப்பொழுது சொல்லப்படும்) இந்த ஆசீர்களெல்லாம் உன்மேல் வந்து உன்னைவிட்டு நீங்கமாட்டா. நீ நகரத்திலும் ஆசீர் பெற்றிருப்பாய்; வெளியிலும் ஆசீர் பெற்றிருப்பாய். உன் கருவின் கனியும், உன் நிலத்தின் பலனும், உன் மிருகவுயிர்களின் பெருக்கமும், உன் மாட்டு மந்தைகளும், உன் ஆட்டு மந்தைகளும் ஆசீர் பெற்றிருக்கும். உன் களஞ்சியங்களும், உனக்கு மிஞ்சிக்கிடக்கும் பொருட்களும் ஆசீர் பெற்றிருக்கும். நீ வருகையிலும் ஆசீர் பெறுவாய்; போகையிலும் ஆசீர் பெறுவாய்.

உனக்கு விரோதமாய் எழும் உன் பகைவர்கள் உனக்கு முன்பாக நிற்கமாட்டாமல் புறமுதுகு காட்டி ஓடும்படி ஆண்டவர் செய்வார். அவர்கள் ஒரு வழியாய் உனக்கு எதிராக வருவார்கள்; ஏழு வழியாய் உன் கண்களுக்கு முன் ஓடிப்போவார்கள். ஆண்டவர் உன் கொடிமுந்திரிப் பழச்சாற்றுக் கிடங்குகளிலும், நீ கையால் செய்யும் எல்லா வேலைகளிலும் உனக்கு ஆசீர் அளிப்பார். உனக்கு அளிக்கப்படும் நாட்டிலும் உனக்கு ஆசீர் அளிப்பார்.

நீ உன் கடவுளாகிய ஆண்டவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு அனுசரித்து அவருடைய வழிகளில் நடப்பாயாயின், அவர் உனக்கு ஆணையிட்ட படியே உன்னைத் தமக்குப் புனித இனமாக ஏற்படுத்துவார். அப்பொழுது ஆண்டவருடைய திருப்பெயர் உன்மேல் உள்ளதென்று உலகிலுள்ள மக்களெல்லாரும் கண்டு உனக்கு அஞ்சுவார்கள்.

உனக்குக் கொடுப்போம் என்று ஆண்டவர் உன் மூதாதையருக்கு ஆணையிட்டுச் சொல்லிய நாட்டில் உன் கருவின் கனியிலும், உன் மிருகவுயிர்களின் பெருக்கத்திலும், உன் நிலத்தின் பலனிலும் பற்பலவித நன்மைகளும் உனக்கு நிறைவாய் இருக்கச் செய்வார். தகுந்த காலத்தில் மழைபெய்யும் படிக்கு ஆண்டவர் தமது சிறந்த செல்வமாகிய வானத்தைத் திறப்பார். நீ செய்யும் கைவேலைகளையெல்லாம் ஆசீர்வதிப்பார். நீ பல இனத்தாருக்குக் கடன் கொடுத்து, எவர் கையிலும் நீ கடன் வாங்காதிருப்பாய். ஆண்டவர் உன்னைக் கடைசியாக வைக்காமல் முதன்மையாகவே உன்னை நியமிக்கவும், நீ ஒருகாலும் கீழாகாமல் எப்போதும் மேற்பட்டவனாய் இருக்கவும் விரும்புவாயாகில், நான் இன்று உனக்கு விதிக்கின்ற உன் கடவுளாகிய ஆண்டவருடைய கட்டளைகளுக்கு நீ செவி கொடுக்கவும், அவைகளைக் கைக்கொண்டு நிறைவேற்ற வேண்டியதுமன்றி, அவைகளை விட்டு விலகி வலப்புறம் இடப்புறம் சாயாமலிருக்கவும், பிற தேவர்களைப் பின்பற்றி வணங்காமல் இருக்கவும் கடவாய்.

**L சாபங்கள் உபா (இச) 28:15-57**

இன்று நான் உனக்கு விதிக்கின்ற உன் கடவுளாகிய ஆண்டவருடைய எல்லாக் கட்டளைகளின்படியும், ஆசாரமுறைகளின் படியும் நடக்கும்படியாக நீ ஆண்டவருடைய குரலுக்குச் செவி கொடாதிருப்பாயாகில், (பின்வரும்) சாபங்கள் உன்மேல் வந்து உன்னை விட்டு நீங்காமல் இருக்கும்.

நகரத்திலும் உனக்குச் சாபம் இருக்கும்; வெளியிலும் உனக்குச் சாபம் இருக்கும். உன் களஞ்சியத்திலும், உனக்குண்டான செல்வத்திலும் நீ சபிக்கப்பட்டிருப்பாய். உன் கருவின் கனியிலும், நிலத்தின் பலனிலும், உன் மாட்டு மந்தையிலும், ஆட்டு மந்தையிலும் சபிக்கப்பட்டிருப்பாய். நீ வருகையிலும் சபிக்கப்பட்டிருப்பாய்; போகையிலும் சபிக்கப்பட்டிருப்பாய்.

நீ ஆண்டவரை விட்டுவிடக் கருதிச் செய்திருக்கும் வெறுப்பூட்டும் உன் செயல்களின் பொருட்டு நீ விரைவில் கெட்டு அழியுமட்டும், ஆண்டவர் வறுமையையும் பசி வேதனையையும் உன் மீது வரச்செய்து, நீ கையிட்டுச் செய்துவரும் எல்லாவற்றையும் கெட்டுப் போகச்செய்வார். நீ உரிமையாக்கிக் கொள்ளும்படி புகவிருக்கும் நாட்டில் ஆண்டவர் உன்னை முற்றிலும் வேரறுக்குமட்டும் உன்னைக் கொள்ளை நோயாலே வதைப்பார். நீ அழியுமட்டும் ஆண்டவர் உன்னை வறியவனாக்கி, காய்ச்சலாலும் கடுங்குளிராலும் கொடிய வெப்பத்தாலும் நச்சுக்காற்றாலும் கருக்கு வாளினாலும் உன்னைத் துன்புறுத்தி வதைப்பார். உன் தலைக்குமேலுள்ள வானம் வெண்கலமும், உன் காலின் கீழுள்ள நிலம் இரும்பும் ஆகும். நீ அழியுமட்டும் உன் நிலங்களுக்கு மழையாகப் புழுதி பெய்யவும், வானத்திலிருந்து உன்மேல் சாம்பல் இறங்கவும் ஆண்டவர் கட்டளையிடுவார்.

உன் பகைவர்களுக்கு முன்பாக நீ முறியடிக்கப்பட்டு, ஒரு வழியாய் அவர்களுக்கு எதிராகப் புறப்பட்டு வந்த நீ, ஏழு வழியாய் ஓடிப்போய், உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் சிதறுண்டு போகும்படி ஆண்டவர் செய்வார். உன் பிணம் வானத்து எல்லாப் பறவைகளுக்கும் மண்ணின் மிருகங்களுக்கும் இரையாகும், இவைகளை விரட்டி அகற்றுவார் இல்லாது போகும். எகிப்தின் எரிபந்தமான பருக்களினாலும், மூலம் முதலிய மெல்லிய இடங்களின் புண்களினாலும், சிரங்கு முதலிய சொறிகளினாலும், நீ குணமடையாதபடிக்கு அவர் உன்னை வதைப்பார். பைத்தியத்தினாலும், குருட்டுத் தன்மையாலும், அறிவு மயக்கத்தினாலும் ஆண்டவர் உன்னை வதைப்பார். குருடன் இருளிலே தடவித் தடவித் திரிகிறது போல, நீ பட்டப்பகலிலே வழி தெரியாமல் தடவித் திரிவாய். நீ எந்நாளும் மனிதர்களுடைய கோள் குண்டணிகளுக்கு உட்பட்டவனாயும், உதவி செய்வாரில்லாமல் அவர்களுடைய கடுமை முதலிய வல்லடிக்கு இலக்காயும் இருப்பாய். நீ மணந்து கொண்ட பெண்ணை மற்றொருவன் அனுபவிப்பான். நீ கட்டின வீட்டிலே குடியேறக் கூடாமற் போவாய். நீ நட்டிய கொடி முந்திரித்தோட்டத்துப் பலனை நீ அனுபவிக்க மாட்டாய். உன் மாடு உன் கண்ணுக்கு முன்பாக அடிபடும். நீ அதில் ஒன்றும் உண்ணக் கூடாமற் போவாய். உன் கழுதை உன் கண் பார்வைக்குமுன் கொள்ளையிடப்பட்டும், அது உனக்குத் திரும்பக்கொடுக்கவும் படாது. உன் ஆடுகள் உன் பகைவருக்குக் கொடுக்கப்பட்டு, அவைகளை விடுவிப்பார் ஒருவரும் இருக்க மாட்டார். நீ பார்க்க, உன் புதல்வர்களும் புதல்வியரும் புற மக்களுக்கு கையளிக்கப்படுவார்கள். நாள் முழுதும் அவர்களைப் பார்த்துப் பார்த்து உன் கண்கள் பூத்துப் போகும். உன் கையும் சோர்ந்து பலனில்லாது போகும்.

உன் நிலத்தின் கனிகளையும், உழைப்பின் பலனையும் நீ அறியாத மக்கள் உண்பர். நீ எந்நாளும் ஒடுக்கப்பட்டுக் கோள் குண்டணிகளால் நொறுக்கப்படுவாய்.

உன் கண்கள் காணும் பயங்கரமான காரியங்களினால் நீ மதிமயங்கிப் போவாய். உன் உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை வரையிலும் உன் முழங்கால்களிலும் தொடைகளிலும் உண்டான கெட்ட புண்ணாலே, நீ குணமாகாதபடிக்கு ஆண்டவர் உன்னை வதைப்பார்.

உனக்கும் உன் மூதாதையருக்கும் தெரியாத இனத்தாரிடம் ஆண்டவர் உன்னையும் உனக்காக நீ ஏற்படுத்திக்கொண்ட உன் அரசனையும் போகச் செய்வார். அங்கே நீ மரமும் கல்லுமான தேவர்களை வணங்கி ஆராதிப்பாய். ஆண்டவர் உன்னைக் கொண்டுபோய்விடும் எல்லா மக்களுக்குள், நீ பழமொழியாயும் கேலிப்பொருளாகவும் அமைந்து கெட்டுப் போவாய். நிலத்தில் மிகுதியான விதை விதைத்துக் கொஞ்சமே அறுப்பாய். வெட்டுக் கிளிகள் எல்லாவற்றையும் தின்றொழித்துவிடும். கொடி முந்திரித் தோட்டத்தை நட்டுப் பயிரிடுவாய். ஆனால் கொடி முந்திரிப் பழச்சாற்றைக் குடிக்கவுமாட்டாய்; பழங்களைச் சேர்க்கவுமாட்டாய். பூச்சி அதைத் தின்றொழிக்கும். ஒலிவ மரங்கள் உன் எல்லைகளில் எங்கும் இருக்கும். ஆனால் நீ எண்ணெய் பூசிக்கொள்ள மாட்டாய். உன் ஒலிவம் பிஞ்சுகள் உதிர்ந்து நாசமாகும். நீ புதல்வர்களையும் புதல்வியரையும் பெறுவாய். ஆயினும், அவர்களால் உனக்கு யாதொரு பயனும் இராது. அவர்கள் சிறைப்படுத்தப்படுவார்கள். உன் மரங்கள் எல்லாவற்றையும், உன் நிலத்தின் கனிகளையும் பூச்சிகள் தின்றொழிக்கும்.

உன் நடுவிலிருக்கிற அந்நியன் உனக்கு மேற்படுவான். அவன் உன்னைவிட வலிமையுள்ளவனாவான். நீயோ தாழ்த்தப்பட்டு அவனுக்குக் கீழாவாய். அவன் உன்னிடம் கடன்படான். நீதான் அவனிடம் கடன்பட்டு வட்டிகொடுப்பாய். அவன் தலையாயிருக்க நீ வாலாய் இருப்பாய்.

நீ உன் கடவுளாகிய ஆண்டவருடைய சொல்லைக் கேளாமலும், அவர் உனக்கு கற்பித்த கட்டளைகளையும் சடங்கு முறைகளையும் கைக்கொண்டு அனுசரியாமலும் போனதால் அந்தச் சாபமெல்லாம் உன்மேல் வந்து, நீ அழியுமட்டும் உன்னைத் தொடர்ந்து வதைக்கும். அவைகள் உன்னிடமும் உன் சந்ததியிடமும் என்றும் அடையாளங்களாகவும், அற்புதங்களாகவும் இருக்கும்.

எல்லாம் மிகுதியாகி மனமகிழ்ச்சியுடனும் இதயக் களிப்புடனும் நீ இருக்கையிலே உன் கடவுளாகிய ஆண்டவருக்கு பணிவிடை செய்யாமல் போனதால், பசி தாகம் நிர்வாணம் முதலிய எல்லாக் குறையும் வெறுமையும் அனுபவித்து, ஆண்டவர் உனக்கு விரோதமாய் அனுப்பும் பகைவர்களுக்குப் பணிவிடை செய்வாய்.

அவர்கள் உன்னை அழிக்குமட்டும் இரும்பு நுகத்தடியை உன் கழுத்தின் மேல் வைப்பார்கள். கிழவன் என்று முகம்பாராமலும், சிறுவர் என்று இரங்காமலும் இருக்கும் அகந்தை கொண்டதும், உனக்குத் தெரியாத மொழியைப்பேசுகிறதும், வேகமாய்ப்பறக்கிற கழுகுக்கு நிகரானதுமான ஓர் இனத்தை மிகத்தொலைவிலுள்ள நாட்டின் கடைக்கோடியிலிருந்து ஆண்டவர் உன்மேல் வரச்செய்வார். நீ அழிந்துபோகும் மட்டும் அந்த இனத்தான் உன் மிருகவுயிர்களின் பலனையும் உன் நிலத்தின் பலனையும் உண்டு வருவான்.

அவன் உன்னை அழித்தொழிக்கும் மட்டும் உன் தானியத்தையும், பழச்சாற்றையும் எண்ணெயையும், ஆட்டு மாட்டு மந்தைகளையும் ஒன்றும் மீதியாக விட்டுவிடாமல் தின்று தீர்ப்பான்.

உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கொடுக்கும் நாட்டில் நீ கட்டி எழுப்பும் உயரமும் பாதுகாப்புமுள்ள மதில்கள் தரையிலே விழுமட்டும் அந்த இனத்தான் உன் நகரங்களிலே உன் வலிமை குன்ற உன்னை நெருக்கி, உன் வாயில்களுக்கு உட்புறத்திலேயே உன்னை முற்றுகையிடுவான். உன் பகைவர்களால் உனக்கு உண்டாகும் வெறுமையும் அவதியும் எவ்வளவென்றால், உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு அளித்துள்ள உன் கருவின் கனியான புதல்வர் புதல்வியருடைய இறைச்சியை நீ உண்பாய். அவர்கள் உன் வாயில்களில் உன்னை முற்றுகையிட்டு நெருக்கித் துன்புறுத்தும் காலத்தில் உனக்கு உணவு இல்லாமையால், உங்களிடையே மெல்லியல்பும் இன்பவெறியும் உள்ளவன் தன் சகோதரனுக்கேனும் தன் நெஞ்சுக்குகந்த மனைவிக்கேனும் தன் துன்பத்தினிடையே தான் உண்ணும் தன் பிள்ளையின் இறைச்சியில் கொஞ்சமேனும் கொடுக்கமாட்டான். இன்பவெறியும் மெல்லியல்புமுள்ள பெண்ணும் அவ்விதமே செய்வாள். எவள் தன் மிதமிஞ்சின மெல்லியல்பைப்பற்றித் தரையிலே உள்ளங்காலை ஊன்றி நடக்க மாட்டாதிருப்பாளோ, அவள் அப்பொழுது தன் நெஞ்சுக்குகந்த கணவனுக்குக்கூடத் தன் புதல்வன் அல்லது புதல்வியுடைய இறைச்சியில் பங்கு கொடுக்க உடன்படாள். அன்றியும், உன் பகைவர்கள் முற்றுகையிட்டு உன் வாயில்களுக்குள்ளே உன்னை நெருக்கி எல்லாவற்றையும் அழித்து விடுவதனால், பெண்கள் அந்நேரத்தில் பிறந்த குழந்தையையும் வயிற்றிலிருந்து வெளிவரும் கசுமாலங்களையும் மறைவிலே உண்பார்கள்.

L **நீதிச்சட்டங்களை மீறினால் வாதை உன்மேல் வரும்.**

**உபா (இச) 28:58-61**

நீ இந்நூலில் எழுதப்பட்டுள்ள எல்லா நீதிச்சட்டங்களையும் கைக்கொண்டு அனுசரிக்காமல், உன் கடவுளாகிய ஆண்டவருடைய மகிமையும் பயங்கரமுமுள்ள திருப்பெயருக்கு அஞ்சாமல் போவாயாகில், ஆண்டவர் நீங்காத பெரிய வாதைகளாலும் மிகக்கொடிய தீராத நோய்களாலும் உன்னையும் உன் சந்ததியாரையும் கடினமாகத் தண்டிப்பார். நீ பயத்தோடு எகிப்திலே கண்ட எல்லா நோய் துயரங்களையும் திரும்ப உன் மேல் வரச்செய்வார். அவை உன்னை விடாமல் பிடித்துக்கொள்ளும். அன்றியும், இந்த நீதிச்சட்ட நூலிலே எழுதாத எல்லா நோய்களையும் வாதைகளையும் நீ அழியுமட்டும் ஆண்டவர் உன்மேல் வருவிப்பார்.

L **மனந்திரும்பத் தாமதியாதே, நமது கோபம் திடீரென வரும்.**

**சீராக் (சீஞா) 5:2-9**

உன் வலிமையை நம்பி உன் இதயத்தின் தீய நாட்டங்களைப் பின்செல்லாதே. நான் எவ்வளவோ வலிமை உள்ளவன்; என் செயல்களைப் பற்றி என்னைக் கணக்குக் கேட்பவன் யார் என்று சொல்லாதே. ஏனென்றால், பழி வாங்கும் கடவுள் பழிவாங்குவார். பாவம் செய்தேன்; அதனால் எனக்கு வந்த தீங்கு என்ன என்று சொல்லாதே. ஏனென்றால் உன்னத கடவுள் பொறுத்திருந்து தண்டிப்பார். பொறுக்கப்பட்ட பாவத்தைப் பற்றி அச்சமற்று இராதே. பாவத்தின்மேல் பாவம் கட்டிக் கொள்ளாதே. ஆண்டவருடைய இரக்கம் பெரிது; என் கணக்கற்ற பாவங்கள் மீது அவர் இரங்குவார் என்று சொல்லாதே. ஏனென்றால், இரக்கமும் கோபமும் அவரிடம் விரைவில் சேர்ந்துவிடும். அப்பொழுது அவர் கோபம் பாவிகள் மீது விழும். மனந்திரும்பி ஆண்டவரிடம் சேரத் தாமதியாதே; நாளுக்கு நாள் தாமதம் செய்யாதே. ஏனென்றால், அவர் கோபம் திடீரென வரும்; பழிவாங்கும் காலத்திலோ அவர் உன்னைச் சிதறடிப்பார்.

# 6. மனந்திரும்புங்கள் உயிர் வாழ்வீர்கள்

L நம்மிடம் திரும்பினால் நன்மைகளைப் பெறுவாய்.

**உபா (இச) 30:10-18**

நீ உன் கடவுளாகிய ஆண்டவருடைய குரலொலிக்குச் செவிகொடுத்து, இந்த நூலில் எழுதப்பட்டுள்ள அவருடைய கட்டளைகளையும் சடங்கு முறைகளையும் கைக்கொண்டு அனுசரித்து, உன் முழு இதயத்தோடும் முழு ஆன்மாவோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடமாய்த் திரும்பினால் மட்டுமே (முன் குறிக்கப்பட்ட நன்மைகளைப் பெறுவாய்). இன்று நான் உனக்குக் கற்பிக்கின்ற இக்கட்டளை உன் ஆற்றலுக்கு அப்பாற்பட்டதும் அன்று. உனக்குத் தூரமானதும் அன்று. நாங்கள் அதைக் கண்டுபிடித்து அதன்படி செய்யும்பொருட்டு, எங்களுக்காக வானத்தில் ஏறிக்கொண்டு வரத்தக்கவன் யார் என்று நீ சொல்லும்படிக்கு, (அந்தக் கட்டளை) வானத்தில் வைக்கப்பட்டதும் அன்று; நாங்கள் அதைக் கண்டுபிடித்து அதன்படி நடக்கும்பொருட்டு, எங்களுக்காகக் கடலைத் தாண்டிக் கொண்டு வரத்தக்கவன் யார் என்று நீ சாக்குப்போக்குச் சொல்லும்படிக்கு, (அந்தக் கட்டளை) கடலுக்கு அப்பால் வைக்கப்பட்டதும் அன்று. நீ அந்தக் கட்டளையின்படி நடக்கும் பொருட்டு, அது உனக்கு மிகவும் அண்மையிலேயே இருக்கிறது. அது உன் வாயிலும் உன் இதயத்திலும் உள்ளது.

இன்று நான் ஒரு பக்கத்திலே வாழ்வையும் நன்மை யையும், மற்றொரு பக்கத்திலே சாவையும் தீமையையும் வைத்து உனக்குக் காண்பித்தேன் என்பதைச் சிந்தித்துப்பார். நீ வாழ்ந்து பெருகவும், நீ உரிமையாக்கிக் கொள்ளப்போகிற நாட்டில் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு ஆசீர் அளிக்கும் படிக்கும் நீ அவர்பால் அன்புகொள்ளவும், அவருடைய வழிகளில் நடக்கவும், அவருடைய கட்டளைகளையும் சட்டங்களையும் சடங்கு முறைகளையும்

கைக்கொண்டு அனுசரிக்கவும் கடவாய். ஆனால், உன் இதயம் பேதலித்து, நீ உன் காதை அடைத்து மதிமயங்கிப் பொய்யைப் பின்பற்றிப் பிற தேவர்களுக்குப் பணிபுரிவாயாகில், நீ அழிந்து போவாயென்றும், யோர்தானைக் கடந்து நீ உரிமைகொள்ளப் புகவிருக்கும் நாட்டிலே கொஞ்சக் காலத்தில் மடிவாயென்றும் இன்று நான் உனக்கு முன்னறிவித்துச் சொல்கிறேன்.

**∟ நீ செய்த துரோகத்தை ஒத்துக்கொள் போதும்.**

**எரே 3:12,13**

நீ வடக்கு முகமாய்த் திரும்பி உரத்த குரலில் இந்த வார்த்தைகளை அறிவி: ஆண்டவர் கூறுகிறார்: பிரமாணிக்கமற்ற இஸ்ராயேலே, திரும்பி வா; நீ வந்தால் நாம் முகத்தைத் திருப்பிக் கொள்ளமாட்டோம்; ஏனெனில் நாம் இரக்கமுள்ளவர், எப்போதும் கோபமாயிரோம், என்கிறார் ஆண்டவர். நீ செய்த துரோகத்தை ஒத்துக்கொள், போதும்: உன் கடவுளாகிய ஆண்டவருக்குத் துரோகம் செய்தாய், பச்சை மரத்தடிதோறும் ஓடி அந்நிய தெய்வங்களோடு விபசாரம் செய்தாய், நம் சொல்லைக் கேட்கவில்லை.

**∟ அவனவன் செயல்களுக்குத் தக்கவாறு தீர்ப்பிடுவோம்.**

**எசே 18:5-18**

எவனொருவன் நீதிமானாய் இருந்து சட்டம் சொல்வதையும் சரியானதையும் செய்வானாயின் - அதாவது, மலைகளின் மேல் படைக்கப்பட்டதை உண்ணாமலும், இஸ்ராயேல் வீட்டின் சிலைகளை நோக்கிப் பாராமலும், அயலான் மனைவியைத் தீண்டாமலும், தீட்டுள்ள பெண்ணோடு சேராமலும், பிறனை ஒடுக்காமல், கடன் வாங்கினவனுக்கு அடைமானத்தைத் திரும்பக்கொடுத்தும், கொள்ளையிடாமலும், பசித்தவனுக்குத் தன் அப்பத்தைப்

பகிர்ந்தளித்தும், ஆடையின்றி இருப்பவனுக்கு ஆடை கொடுத்தும், வட்டிக்குப் பணம் கொடாமலும், தான் கொடுத்ததற்கு அதிகமாய் வாங்காமலும், அக்கிரமத்தில் உட்படாமலும், ஒருவர் ஒருவருக்கு இடையே உண்டான வழக்கை நியாயமாய்த் தீர்த்தும், நம் கற்பனைகளைக் கடைப்பிடித்தும், நாம் வகுத்த முறைமைகளின்படி நடந்தும் வந்தால் - அவனே நீதிமான்; அவன் வாழ்வான் என்பது உறுதி, என்கிறார் ஆண்டவராகிய இறைவன். ஆனால் இம்மனிதனுக்கு ஒரு மகன் பிறந்து, அவன் திருடனாகவும், இரத்தம் சிந்துகிறவனாகவும், முன்சொல்லிய குற்றங்களில் ஏதேனும் ஒன்றைச் செய்கிறவனாகவும் இருந்தால் - அதாவது, முன்சொல்லிய புண்ணியங்களை எல்லாம் செய்வதை விட்டு, அதற்கு மாறாக, மலைகளில் படைத்தவற்றைச் சாப்பிட்டும், அயலான் மனைவியைத் தீண்டியும், சிறுமையும் எளிமையுமான பிறனை ஒடுக்கியும், கொள்ளை அடித்தும், அடைமானத்தைத் திரும்பக் கொடாமலும், சிலைகளை நோக்கிப் பார்த்து அருவருப்பானதைச் செய்தும், வட்டி வாங்கியும், தான் கொடுத்ததற்கு அதிகமாய் வாங்கியும் வந்தால் - அவன் உயிர் வாழ்வானோ? அவன் உயிர் வாழான்; அருவருப்பான அவற்றையெல்லாம் செய்த அவன் சாவான் என்பது உறுதி; அவனது இரத்தப்பழி அவன் மேலேயே இருக்கும்.

ஆனால் அவனுக்குப் பிறந்த மகன் தன் தகப்பன் செய்த பாவங்களையெல்லாம் கண்டு பயந்து, அவ்வாறு செய்யாமல் - அதாவது, மலைகளின்மேல் படைக்கப்பட்டதை உண்ணாமலும், இஸ்ராயேல் வீட்டின் சிலைகளை நோக்கிப் பாராமலும், அயலான் மனைவியைத் தீண்டாமலும், ஒருவனையும் ஒடுக்காமலும், அடைமானத்தை வைத்துக் கொள்ளாமலும், கொள்ளையிடாமலும், பசித்தவனுக்குத்

தன் அப்பத்தைப் பகிர்ந்தளித்தும், ஆடையின்றி இருப்பவனுக்கு ஆடை கொடுத்தும், ஏழையைத் துன்புறுத்தாமலும், வட்டி வாங்காமலும், தான் கொடுத்ததற்கு அதிகமாய் வாங்காமலும், நம் கற்பனைகளைக் கடைபிடித்தும், நாம் வகுத்த முறைமைகளின்படி நடந்தும் வந்தால் - இவன் தன் தகப்பனின் அக்கிரமத்துக்காகச் சாகமாட்டான்; இவன் வாழ்வான் என்பது உறுதி. இவனுடைய தகப்பனோ பிறனைக் கொடுமைப்படுத்தி, சகோதரனைக் கொள்ளையடித்து, தன் இனத்தார் நடுவில் பொல்லாங்கு செய்ததால், இதோ, அவன் தன் அக்கிரமத்திலேயே மடிவான்.

### அக்கிரமங்களை விட்டு மனந்திரும்புங்கள்.

**எசே 18:30-32**

“ஆகையால், இஸ்ராயேல் வீட்டாரே, உங்களுள் ஒவ்வொருவனையும் அவனவன் நடத்தைக்குத் தக்கவாறு தீர்ப்பிடுவோம், என்கிறார் ஆண்டவராகிய இறைவன். நீங்கள் உங்கள் அக்கிரமங்களை யெல்லாம் விட்டு மனந்திரும்புங்கள்; அப்போது நீங்கள் பாவத்தில் விழ இடமிராது. நமக்கு எதிராய் நீங்கள் செய்த துரோகங்களையெல்லாம் தூரமாக எறிந்துவிடுங்கள்; புதிய உள்ளத்தையும் புதிய மனத்தையும் உங்களுக்கெனப் படைத்துக் கொள்ளுங்கள். இஸ்ராயேல் வீட்டாரே, நீங்கள் ஏன் சாகவேண்டும்? எவனும் சாகவேண்டும் என நாம் விரும்புவதில்லையே, என்கிறார் ஆண்டவராகிய இறைவன். ஆகவே மனந்திரும்புங்கள்; உயிர் வாழ்வீர்கள்.”

### தீயவன் திருந்தி வாழவேண்டும் என்பதே நம் விருப்பம்.

**எசே 33:10-16**

நீயோ, மனிதா, இஸ்ராயேல் வீட்டாருக்குச் சொல்: நீங்கள், ‘எங்கள் அக்கிரமங்களும் பாவங்களும் எங்கள் மேல் இருக்கின்றன, அவற்றினால் நாங்கள் சோர்ந்து

போகிறோம், நாங்கள் பிழைப்பது எப்படி?' என்று சொல்லுகிறீர்கள். நீ அவர்களுக்குச் சொல்: ஆண்டவராகிய இறைவன் கூறுகிறார்: நம் உயிர் மேல் ஆணை! தீயவன் சாகவேண்டும் என்பது நம் விருப்பமன்று; ஆனால் அவன் தன் தீய வழியை விட்டுத் திரும்பி வாழ வேண்டும் என்பதே நம் விருப்பம். 'இஸ்ராயேல் வீட்டாரே, மனந்திரும்புங்கள்; உங்கள் தீய வழிகளினின்று திரும்புங்கள்; நீங்கள் ஏன் சாக வேண்டும்?' (என்று சொல்.)

நீயோ, மனிதா, உன் இனத்தார்க்குக் கூறு: நீதிமான் பாவஞ் செய்தால், அவனுடைய நீதி அவனை மீட்காது; தீயவன் தன் அக்கிரமத்தை விட்டு மனந்திரும்பினால் அவ்வக்கிரமத்தினால் அவனுக்குப் பொல்லாப்பு ஒன்றும் வராது; நீதிமான் பாவஞ் செய்யும் போது, தன் நீதியால் வாழ்வதில்லை. கண்டிப்பாய்ப் பிழைப்பான் என்று நாம் நீதிமானுக்குச் சொல்லியிருந்தாலும், அவன் தன் நீதியை நம்பிப் பாவத்தில் விழுந்தானாயின் அவனுடைய முன்னைய புண்ணியங்களை எல்லாம் நினைக்க மாட்டோம்; அவன் தான் செய்த அக்கிரமத்திலேயே சாவான். ஆனால் கண்டிப்பாய்ச் சாவான் என்று தீயவனுக்கு நாம் சொல்லி யிருந்தாலும், அவன் தான் செய்த அக்கிரமத்திற்காக மனம் வருந்திச் சட்டம் சொல்வதையும் சரியானதையும் செய்தால், தான் வாங்கின அடைமானத்தையும், கொள்ளையடித்த பொருளையும் திருப்பிக்கொடுத்துவிட்டு, இனி அநியாயம் ஏதும் செய்யாமல், வாழ்வளிக்கும் கற்பனைகளைக் கடைப்பிடித்தால், அவன் கண்டிப்பாய்ப் பிழைப்பான். அவன் முன்பு செய்த பாவமொன்றும் இனி அவனுக்கு எதிராய் நினைக்கப்படாது; சட்டம் சொல்வதையும் சரியானதையும் அவன் செய்ததால், அவன் கண்டிப்பாய் வாழ்வான்.

**L என் தந்தையின் விருப்பப்படி நடப்பவன் வாழ்வான்.**
**மத் 7:21-27**

"என்னை நோக்கி, 'ஆண்டவரே, ஆண்டவரே' என்று சொல்பவனெல்லாம் விண்ணரசு சேரமாட்டான். வானகத்திலுள்ள என் தந்தையின் விருப்பப்படி நடப்பவனே சேருவான். அந்நாளில் பலர் என்னை நோக்கி, 'ஆண்டவரே, ஆண்டவரே, உம் பெயரால் நாங்கள் தீர்க்கதரிசனம் கூறவில்லையா? உம் பெயரால் பேய்களை ஓட்டவில்லையா? உம் பெயரால் புதுமை பல செய்யவில்லையா?' என்பர். அதற்கு, 'உங்களை நான் அறிந்ததேயில்லை. நெறிகெட்டவர்களே, என்னை விட்டு அகன்று போங்கள்' என்று அவர்களுக்கு நான் வெளிப்படையாகச் சொல்லுவேன்." "ஆகவே, நான் சொல்லும் இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவற்றின்படி நடப்பவன் எவனும் கற்பாறையின்மீது தன் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவான். மழை பெய்தது, வெள்ளம் வந்தது, புயலடித்து அவ்வீட்டின் மேல் மோதியது. ஆனால், அது விழவில்லை. ஏனென்றால், கற்பாறையின் மேல் ஊன்றியிருந்தது. நான் சொல்லும் இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவற்றின்படி நடக்காதவன் எவனும் மணல்மீது தன் வீட்டைக் கட்டிய மூடனுக்கு ஒப்பாவான். மழை பெய்தது, வெள்ளம் வந்தது, புயலடித்து அவ்வீட்டின் மேல் மோதியது. அது விழுந்தது. பெரிது அதன் அழிவு!"

**L உள்ளத்தின் ஆழத்தில் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.**
**எபே 4:17-32**

எனவே ஆண்டவருக்குள் நான் உங்களுக்கு வற்புறுத்திக் கூறுவதாவது: புற இனத்தார் நடப்பதுபோல் இனி நீங்கள் நடக்கலாகாது. அவர்கள் மனத்தில் தோன்றும் எல்லா வீண் எண்ணங்களையும் பின்பற்றி வாழ்கின்றனர். அவர்களுடைய அறிவு இருளடைந்து, உள்ளம் மழுங்கியதால்

அவர்களுக்கு ஏற்பட்ட அறியாமையால், கடவுள் தரும் உயிரோடு தொடர்பின்றி வாழ்கின்றனர். உள்ளம் மரத்துப் போனவர்களாய், தீராத இச்சைக்கு உட்பட்டு, எல்லா வகையான அசுத்த செயல்களையும் செய்ய, காமவெறிக்குத் தங்களையே கையளித்துவிட்டனர். ஆனால், நீங்கள் கிறிஸ்துவைப்பற்றி இவ்வாறு கற்றறியவில்லை. உங்களுக்கு இயேசுவைப்பற்றி அறிவிக்கப்பட்டதும், போதிக்கப்பட்டதும் அவரில் அடங்கியுள்ள உண்மைக்கு ஏற்ப இருந்ததன்றோ? அதன்படி உங்களுடைய முந்தின நடத்தையை விட்டுவிட்டு, தீய இச்சைகளால் ஏமாந்து பாழ்பட்டுப் போகும் பழைய இயல்பைக் களைந்துவிடுங்கள்; உள்ளத்தின் ஆழத்தில் உங்களைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்; உண்மையால் ஏற்படும் நீதியிலும் புனிதத்திலும் கடவுள் சாயலாகப் படைக்கப்பட்ட புதிய இயல்பை அணிந்துகொள்ளுங்கள். ஆகையால், பொய்யை விலக்கி, ஒருவரிடம் ஒருவர் உண்மை யையே பேசுங்கள். ஏனெனில், நாம் ஒருவருக்கொருவர் உறுப்புகளாய் இருக்கிறோம். சினம்கொண்டாலும் பாவத்திற் காளாகாதீர்கள். பொழுது சாய்வதற்குள் உங்கள் கோபம் தணியட்டும். அலகைக்கு இடம் கொடாதீர்கள். திருடன் இனித் திருடாமலிருக்கட்டும். மாறாக, வறியவர்களுக்கு உதவக்கூடிய முறையில், நேர்மையோடு கையால் பாடுபட்டு உழைக்க வேண்டும். தீய சொல் எதுவும் உங்கள் வாயினின்று வராதிருக்கட்டும். கேட்போருக்கு அருட்பயன் விளையுமாறு தேவைக்கு ஏற்றபடி ஞான வளர்ச்சி தரக்கூடிய நல்ல வார்த்தைகளையே சொல்லுங்கள். கடவுளின் பரிசுத்த ஆவிக்கு வருத்தம் விளைவிக்காதீர்கள். ஏனெனில், அவர் மீட்பின் நாளை முன்னிட்டு உங்களுக்குத் தம் முத்திரையிட்டிருக்கிறார். மனக்கசப்பு, சீற்றம், சினம், வீண் கூச்சல், பழிச்சொல் ஆகிய அனைத்தும் உங்களை விட்டொழியட்டும். எல்லா வகையான தீய மனமும் நீங்கட்டும். ஒருவருக்கொருவர் பரிவும், இரக்கமும் காட்டுங்கள். கிறிஸ்துவுக்குள் கடவுள் உங்களை மன்னித்தது போல் நீங்களும் ஒருவரையொருவர் மன்னியுங்கள்.

# 7. இயேசுவே மீட்பர்

**∟ நம் வார்த்தை உன்னைத் தீர்ப்பிடும். அரு (யோவா) 12:47,48**

நான் சொல்வதை ஒருவன் கேட்டபின் அதன்படி நடவாவிடில், அவனுக்குத் தீர்ப்பிடுவது நானல்லேன்; ஏனெனில், நான் உலகிற்குத் தீர்ப்பிட வரவில்லை, உலகை மீட்கவே வந்தேன். என்னைப் புறக்கணித்து நான் சொல்வதை ஏற்றுக்கொள்ளாதவனுக்குத் தீர்ப்பிடும் ஒன்று உண்டு: நான் கூறிய வார்த்தையே அவனுக்கு இறுதி நாளில் தீர்ப்பிடும்.

**∟ மீட்படைவதற்கு ஒரே பெயர். அப். பணி (திப) 4:12**

இயேசுவாலன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை; ஏனெனில், நாம் "மீட்படைவதற்கு அவர் பெயரைத்தவிர இவ்வுலகில் மனிதருக்கு வேறு பெயர் அருளப்படவில்லை."

**∟ விசுவசி, பாவமன்னிப்புப் பெறுவாய். அப். பணி (திப) 10:43**

அவரைக் (இயேசுவை) குறித்தே இறைவாக்கினர் அனைவரும் சாட்சியம் பகர்கின்றனர். 'அவரை விசுவசிக்கும் அனைவரும் அவருடைய பெயரால் பாவ மன்னிப்புப் பெறுவர்' என்று அவர்கள் கூறுகின்றனர்.

**∟ பாவமன்னிப்பு அளிப்பவர் ஒருவரே. அப். பணி (திப) 13:37,38**

யாரைக் கடவுள் எழுப்பினாரோ, அவர் அழிவுறவில்லை. எனவே, சகோதரரே, இவர் (இயேசு) வழியாகவே பாவமன்னிப்பு உங்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

# 8. அன்பு இறைப்பண்பு

**முதன்மையான அன்புக் கட்டளைகள்.**

**மாற் 12:28-31**

அவர்கள் வாதாடிக்கொண்டிருப்பதைக் கேட்ட மறைநூல் அறிஞருள் ஒருவன் முன் வந்து, அவர் நன்றாக விடையளித்ததைக்கண்டு, "எல்லாவற்றிலும் முதல் கட்டளை எது?" என்று அவரைக் கேட்டான்.

இயேசு மறுமொழியாக: 'இஸ்ராயேலே கேள்: **நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர். ஆகவே, உன் கடவுளாகிய ஆண்டவருக்கு உன் முழு உள்ளத்தோடும் உன் முழு ஆன்மாவோடும் உன் முழு மனத்தோடும் உன் முழு வலிமையோடும் அன்பு செய்வாயாக'** என்பது முதல் கட்டளை. **'உன் மீது நீ அன்புகாட்டுவதுபோல் உன் அயலான்மீதும் அன்புகாட்டுவாயாக'** என்பது இரண்டாம் கட்டளை.

**என் அன்பனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்.**

**அரு (யோவா) 14:21**

"என் கட்டளைகளை ஏற்றுக் கடைப்பிடிப்பவனே எனக்கு அன்புகாட்டுகிறவன்; எனக்கு அன்புகாட்டுகிறவன்மேல் என் தந்தையும் அன்பு கூர்வார். நானும் அவன்மேல் அன்புகூர்ந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்."

**என்னை அன்பு செய்கிறவன் எனக்குச் செவி கொடுப்பான்.**

**அரு (யோவா) 14:23,24**

இயேசு மறுமொழியாகக் கூறினார்: ஒருவன் எனக்கு அன்பு செய்தால் என் வார்த்தையைக் கேட்பான்; என் தந்தையும் அவன்மேல் அன்புகூர்வார்; நாங்களும் அவனிடம் வந்து, அவனோடு குடிகொள்வோம்.

எனக்கு அன்புசெய்யாதவன் என் வார்த்தைகளைக் கேட்பதில்லை. நீங்கள் கேட்கும் வார்த்தையோ என்னுடைய தன்று: என்னை அனுப்பிய தந்தையுடையதே.

**அன்பின் மேன்மை. 1 கொரி 13:4-10**

அன்பு பொறுமையுள்ளது, பரிவுள்ளது. அன்பு அழுக்காறு கொள்ளாது. பெருமை பேசாது, இறுமாப்பு அடையாது, இழிவானதைச் செய்யாது, தன்னலத்தைத் தேடாது, சீற்றத்திற்கு இடந்தராது, வர்மம் வைக்காது. அநீதியைக் கண்டு மகிழ்வுறாது; உண்மையைக் கண்டு உளமகிழும். அனைத்தையும் தாங்கிக்கொள்ளும்; பிறர் மீது நல்லெண்ணம் இழப்பதில்லை; நம்பிக்கையில் தளர்வதில்லை; அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும், அன்புக்கு என்றும் முடிவு இராது; இறைவாக்கு வரம் எது இருந்தாலும், அது ஒருநாள் இல்லாமற் போகும்; பரவசப் பேச்சு வரம் இருந்தால், அதுவும் முற்றுப்பெறும்; அறிவு வரம் இருந்தால், அதுவும் ஒருநாள் இல்லாமற் போகும். ஏனெனில், நமது அறிவு குறைவுள்ளது; நாம் உரைக்கும் இறைவாக்கும் குறைவுள்ளது; நிறைவுள்ளது தோன்றும்பொழுது குறைவுள்ளது மறைந்துவிடும்.

**தூய ஆவியின் கனிகளாவன. கலா 5:22-24**

அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், விசுவாசம், சாந்தம், தன்னடக்கம். இவையுள்ள இடத்தில் சட்டம் எத்தடையும் விதிப்பதற்கு இடமில்லை. கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும் இச்சைகளோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்துவிட்டார்கள்.

# 9. என் ஆயன் ஆண்டவர்

**L நம் ஊழியன் நமக்கே சொந்தம். இசை. (எசா) 44:1-5**

“நம் ஊழியனாகிய யாக்கோபே, நாம் தேர்ந்து கொண்ட இஸ்ராயேலே, கேள். உன்னைப் படைத்துத் தாய் வயிற்றில் உருவாக்கிக் காத்துவரும் ஆண்டவர் கூறுகிறார்: நம் ஊழியனாகிய யாக்கோபே, நாம் தேர்ந்துகொண்ட நேர்மையாளனே, அஞ்சவேண்டா. ஏனெனில் வறண்ட இடத்தில் நீரைப் பொழிவோம்.

ஈரமற்ற நிலத்தில் ஆறுகள் ஓடச் செய்வோம். உனது வித்தின்மேல் நம்முடைய ஆவியையும், உனது சந்ததியின்மேல் நமது ஆசியையும் பொழிவோம். செடிகளைப்போல் அவர்கள் தளிர்ப்பார்கள், நீரருகில் உள்ள மரம்போலத் தழைப்பார்கள். ‘நான் ஆண்டவருக்குச் சொந்தம்’ என்பான் ஒருவன்; யாக்கோபின் பெயரைச் சூடிக்கொள்வான் மற்றொருவன். ‘ஆண்டவர்’ என்று இன்னொருவன் தன் கையில் எழுதி, ‘இஸ்ராயேல்’ என்று புனைபெயர் சூடிக்கொள்வான்.”

**L என் ஆயன் ஆண்டவர்: எனக்கென்ன குறைவு!**

**சங் 22 (திபா 23)**

பசும்புல் மேய்ச்சலில் என்னை இளைப்பாறச் செய்கின்றார். என் களைப்பை ஆற்ற நீர் அருவிக்கு என்னை அழைத்துச் செல்கின்றார்; எனக்குப் புத்துயிர் ஊட்டுகின்றார்: தம் திருப்பெயரின் பொருட்டு என்னைத் தம் நேரிய வழியில் செலுத்துகின்றார். இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும், தீமையானதெதற்கும் அஞ்சேன்: ஏனெனில், நீர் என்னோடு இருக்கின்றீர்; உமது கோலும்

கைத்தடியும் எனக்கு ஆறுதலாய் உள்ளன. என் எதிரிகள் காண, நீர் எனக்கு விருந்தொன்றைத் தயாரிக்கின்றீர்: என் தலைக்கு எண்ணெய் பூசினீர்; என் கிண்ணம் நிரம்பி வழிகின்றது. கருணையும் அருளும் என்னைத் தொடரும்; என் வாழ்நாளெல்லாம் என்னைத் தொடரும்: ஆண்டவர் தம் இல்லத்தில் நான் குடியிருப்பேன்; ஊழி ஊழிக்காலமும் குடியிருப்பேன்.

**L என்னைச் சார்ந்தவனை விடுவித்து மீட்பேன்.**

**சங் 90 (திபா 91)**

உன்னதரின் அடைக்கலத்தில் இருப்பவனே, எல்லாம் வல்லவரின் நிழலில் வாழ்பவனே, நீ ஆண்டவரை நோக்கி, "நீரே என் புகலிடம், நீரே என் அரண்: என் இறைவா, நான் உம்மை நம்பியுள்ளேன்" என்று சொல். ஏனெனில், வேடர்களின் கண்ணிகளினின்றும், கொடிய கொள்ளை நோயினின்றும் உன்னை அவரே விடுவிப்பார். தம் சிறகுகளால் உன்னைக் காப்பார்; அவருடைய இறக்கைகளுக்கடியில் அடைக்கலம் புகுவாய்: தவறாத அவருடைய வார்த்தை உனக்குக் கேடயமும் கவசமும் போல் இருக்கும். இரவின் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும் நீ அஞ்சவேண்டியதில்லை. இருளில் உலவும் கொள்ளை நோய், நண்பகலில் துன்புறுத்தும் ஆபத்து எதற்குமே நீ அஞ்சவேண்டியதில்லை. உன் அருகில் ஆயிரம் விழட்டும், உன் வலப்பக்கத்தில் பத்தாயிரம் விழட்டும்: உன்னை எதுவும் அணுகாது. எனினும் உன் கண்ணாலேயே நீ காண்பாய்: பாவிகளுக்குக் கிடைக்கும் தண்டனையை நீயே பார்ப்பாய். உனக்கோ, ஆண்டவரே உன் புகலிடம்: உன்னதமானவரையே நீ உனக்குப் பாதுகாப்பு அரணாகக் கொண்டாய். தீமை உன்னை அணுகாது: துன்பம் உன் உறைவிடத்தை நெருங்காது. ஏனெனில், நீ செல்லும் இடங்களில் எல்லாம், உன்னைக் காக்கும்படி தம் தூதருக்கு

உன்னைக் குறித்துக் கட்டளையிட்டார். உன் கால் கல்லில் மோதாதபடி, அவர்கள் உன்னைக் கைகளில் தாங்கிக் கொள்வார்கள். நச்சுப் பாம்பின்மீதும், விரியன் பாம்பின்மீதும் நடந்து செல்வாய்: சிங்கத்தையும் பறவை நாகத்தையுமே மிதித்துப்போடுவாய். அவன் என்னையே சார்ந்திருப்பதால், அவனை விடுவிப்பேன். என் பெயரை அறிந்ததால், அவனைக் காப்பாற்றுவேன்; என்னை நோக்கிக் கூப்பிடுவான்; அவன் செபத்தைக் கேட்பேன்: துன்ப வேளையில் அவனோடு இருப்பேன்; அவனைத் தப்புவித்து பெருமைப்படுத்துவேன். நீடிய வாழ்வினால் அவனுக்கு மன நிறைவு தருவேன்: என் மீட்பினை அவனுக்குக் காட்டுவேன்.

**L உன்னைக் காக்கும் நாம் உறங்கிவிட மாட்டோம்.**

**சங் 120 (திபா 121)**

மலைகளை நோக்கி என் கண்களை உயர்த்தினேன்: “உதவி எனக்கு எங்கிருந்து வரும்?” என்றேன். உதவி எனக்கு ஆண்டவரிடமிருந்தே வரும்: அவரே வானமும் வையமும் படைத்தவர். உன் கால் இடற விடமாட்டார்: உன்னைக் காக்கும் அவர் உறங்கிவிடமாட்டார். இதோ, இஸ்ராயேலைக் காப்பவர் அயர்வதுமில்லை: உறங்குவது மில்லை. ஆண்டவர் உன்னைக் காக்கிறார்: ஆண்டவர் உன் வலப்புறத்தில் உன் பாதுகாப்பாயிருக்கிறார். பகலில் வெயில் உனக்குத் தீங்கு இழைக்காது: இரவில் நிலாவும் தீமை ஒன்றும் செய்யாது. ஆண்டவர் எல்லாத் தீமையினின்றும் உன்னைக் காப்பார்: அவரே உன் ஆன்மாவையும் காப்பவர். ஆண்டவர் நீ போகும்போதும் காப்பார், வரும்போதும் காப்பார்: இப்போதும் எப்போதும் உன்னைக் காப்பார்.

## 10. இறையாற்றலோடு அலகையை வென்றிடுங்கள் எபே 6:10-19

ஆண்டவரில் அவர் தரும் வலிமைமிக்க ஆற்றலால் உறுதிபெறுங்கள். அலகையின் வஞ்சகத் தந்திரங்களை எதிர்த்து நிற்கும் வலிமை பெறும்படி கடவுள் தரும் படைக்கலங்களை அணிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் நாம் வெறும் மனிதர்களோடு போராடுவதில்லை. தலைமை ஏற்போர், அதிகாரம் தாங்குவோர், இருளில் மூழ்கிய இவ்வுலகின்மீது ஆதிக்கம் செலுத்துவோர், வான் வெளியில் திரியும் தீய ஆவிகள் ஆகிய இவர்களோடு போராடுகிறோம். எனவே பொல்லாத நாள் வரும்போது, எதிர்த்து நின்று, அனைத்தின் மீதும் வெற்றியடைந்து நிலைநிற்க வலிமை பெறும்படி, கடவுள் தரும் படைக்கலங்களை எடுத்துக்கொள்ளுங்கள்.

ஆகையால் உண்மையை உங்கள் இடைக்கச்சையாகக் கட்டிக்கொண்டு, நீதியை உங்கள் மார்புக் கவசமாக அணிந்து நில்லுங்கள். சமாதான நற்செய்தியை அறிவிக்கும் ஆர்வத்தை உங்கள் மிதியடிகளாகப் போட்டுக்கொள்ளுங்கள். எந்நிலையிலும் விசுவாசமாகிய கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். இதைக்கொண்டு நீங்கள் தீயவனின் தீக்கணைகளை அவிக்க முடியும். மீட்பையே தலைச்சீராவாகத் தாங்கி, கடவுளின் சொல்லைத் தேவஆவி தரும் போர்வாளாக ஏந்திக் கொள்ளுங்கள்.

செபிப்பதிலும் மன்றாடுவதிலும் நிலையாய் இருங்கள். தேவ ஆவியால் ஏவப்பட்டு எவ்வேளையிலும் செபியுங்கள். இதன் பொருட்டு, சோர்வுறாமல் விழிப்பாய் இருங்கள். இறைமக்கள் அனைவருக்காகவும் மன்றாடுங்கள்.

# 11. ஆண்டவரைப் போற்றுங்கள்

**சங் 135 (திபா 136)**

ஆண்டவர் நல்லவர், அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவரது அருளன்பு என்றென்றும் நிலைத்துள்ளது.

தேவர்களுக்கெல்லாம் தேவனைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

அரும்பெரும் செயல்கள் புரிந்தவர் அவர் ஒருவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

ஞானமுடன் வானங்களை அமைத்தவர் அவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

நீர்த்திரள்மீது நிலத்தை அமைத்தவர் அவரே; அவரைப் புகழுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

பேரொளி விளக்குகளை ஏற்படுத்தியவர் அவரே; அவரைப் புகழுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

பகலை ஆள்வதற்குப் பகலவனைப் படைத்தவர் அவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

இரவை ஆள்வதற்கு நிலவையும் விண்மீன்களையும் ஏற்படுத்தியவர் அவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

எகிப்தியரின் தலைப்பேறுகளை வீழ்த்தியவர் அவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

எகிப்தியரிடையிலிருந்து இஸ்ராயேலரை வெளி யேற்றியவர் அவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில்

அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

வலிமையுள்ள கரத்தையும், தம் தோளின் பலத்தையும் காட்டியவர் அவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

செங்கடலை இரண்டாகப் பிரித்தவர் அவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

அக்கடல் நடுவே இஸ்ராயேலை வழி நடத்தியவர் அவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

பாரவோனையும் அவன் படைகளையும் செங்கடலில் அமிழ்த்தியவர் அவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

பாலைவனத்தின் வழியே தம் மக்களை அழைத்துச் சென்றவர் அவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

பெரிய அரசர்களை வதைத்து வீழ்த்தியவர் அவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

வல்லமை மிக்க அரசர்களைக் கொன்று குவித்தவர் அவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

அமோறைய மன்னன் செகோனைக் கொன்றவர் அவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

பாசான் நாட்டு மன்னன் ஓக் என்பானை வதைத்தவர் அவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

அவர்கள் நாட்டை தம் மக்களுக்கு உரிமையாக்கியவர் அவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

தம் ஊழியரான இஸ்ராயேலுக்கு உரிமையாக்கியவர் அவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

தாழ்வுற்ற நிலையில் நம்மை நினைவுகூர்ந்தவர் அவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

நம் எதிரிகளிடமிருந்து நம்மை விடுவித்தவர் அவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

உயிரினம் அனைத்திற்கும் உணவூட்டுபவர் அவரே; அவரைப் போற்றுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

விண்ணக இறைவனைப் புகழுங்கள்: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

## 12. முழு இதயத்தோடு தேடினால் நம்மைக் கண்டடைவீர்கள்.

**எரே 29:11-14**

நாம் உங்களைப் பற்றிக் கொண்டிருக்கும் எண்ணங்கள் நமக்குத் தெரியும்; அவை உங்களுக்கு வளமான பிற்காலத்தையும் நம்பிக்கையையும் தரும்படி நாம் கொண்ட சமாதானத்தின் எண்ணங்களே தவிர, துன்பத்தின் எண்ணங்கள் அல்ல. நீங்கள் நம்மை மன்றாடித் திரும்ப வருவீர்கள்; நீங்கள் நம்மை வேண்டுவீர்கள்; நாம் உங்கள் மன்றாட்டைக் கேட்டருளுவோம். நீங்கள் நம்மைத் தேடுவீர்கள்; முழு இதயத்தோடு தேடி நம்மைக் கண்டடைவீர்கள்; ஆம், மெய்யாகவே நம்மைக் கண்டடைவீர்கள், என்கிறார் ஆண்டவர்.

**எரே 33:3**

நம்மை நோக்கிக் கூப்பிடு; நாம் உனக்குச் செவிசாய்ப்போம்; நீ அறியாத பெரியனவும் மறைந்தனவுமான சிலவற்றை உனக்கு அறிவிப்போம்.

# 13. ஒப்புரவு அருட்சாதனம்.

**பாவங்களை குருவிடம் அறிக்கையிடு:**

பாவங்களை நேரடியாக கடவுளிடம் அறிக்கையிட்டு மன்னிப்பைப் பெறலாமா? அல்லது குருவிடம் அறிக்கை யிட்டுத்தான் கடவுளிடமிருந்து மன்னிப்பைப் பெற முடியுமா?

தூய ஆவியின் துணையோடு பரிசுத்த வேதாகமத்தை சிந்திக்கும் போது குருவிடம் நம் பாவங்களை அறிக்கையிட்டே கடவுளிடமிருந்து மன்னிப்பைப் பெற முடியும் என்று நாம் உணர்கிறோம்.

**ஆதாரங்கள்**

1. குரு அவனுக்காகவும் அவன் பாவத்துக்காகவும் மன்றாடவே அவன் மன்னிப்படைவான். **லேவி 4:26**
2. யோசுவா ஆக்கானை நோக்கி, “மகனே, நீ இப்போது இஸ்ராயேலின் ஆண்டவராகிய கடவுளை மாட்சிப் படுத்து. அவருக்கு முன்பாக ஒன்றும் ஒளியாமல் நீ செய்த பாவத்தை எனக்குச் சொல்” என்றார். **யோசு 7:19**
3. தாவீது, நாத்தான் என்ற இறைவாக்கினரிடம், “நான் ஆண்டவருக்கு எதிராகப் பாவம் செய்தேன்” என்றார். நாத்தான் தாவீதை நோக்கி, “ஆண்டவர் உமது பாவத்தை மன்னிப்பார். நீர் சாகப் போகிறதில்லை” என்று மறுமொழி கூறினார். **2 சாமு 12:13**
4. யெருசலேமிலும் யூதேயா முழுவதிலும், யோர்தானை அடுத்த நாடெங்கும் வாழ்ந்தோர் அவரிடம் (ஸ்நாபக அருளப்பரிடம்) போய், தங்கள் பாவங்களை வெளியிட்டு, யோர்தான் ஆற்றில் அவரிடம் ஞானஸ் நானம் பெற்று வந்தனர். **மத் 3:5,6**

5. (இயேசு உயிர்த்த பின் சீடர்களுக்குத் தோன்றி) அவர்கள் மீது ஊதி, “பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ, அவர்களுக்கு அவை மன்னிக்கப் பெறும்; எவர்களுடைய பாவங்களை மன்னியாது விடுவீர்களோ, அவை மன்னிப்பின்றி விடப்படும்.” என்றார்.

**அரு (யோவா) 20:22,23**

6. “கடவுளே கிறிஸ்துவின் வழியாய் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கி, ஒப்புரவு செய்யும் திருப்பணியை எங்களுக்குக் கொடுத்தார். உள்ளபடியே கடவுள் உலகினரின் குற்றங்களுக்குரிய கடனைக் கணிக்காமல் அவர்களைக் கிறிஸ்துவுக்குள் தம்மோடு ஒப்புரவாக்கினார்; அவரே அந்த ஒப்புரவுச் செய்தியை எங்களிடம் ஒப்படைத்தார். ஆகவே நாங்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாய்ச் செயலாற்றுகிறோம்.”

**2 கொரி 5:18-20**

7. தன் பாவங்களை மறைக்கிறவன் வாழவே மாட்டான். ஆனால், அவைகளை அறிக்கை செய்து, விட்டு விடுகிறவன் இரக்கத்தைப் பெறுவான்.

**பழ (நீமொ) 28:13**

***குறிப்பு:***

*இங்கே நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். கண்களை மூடித் தன் உள்ளத்திலேயே கடவுளிடம் நேரடியாகத் தன் பாவங்களை அறிக்கையிடுபவன் அப்பாவங்களை மறைக்க வேண்டும் என நினைப்பதற்கு வாய்ப்பில்லை. தான் தன்னைப் போன்ற ஒரு மனிதரிடம் அறிக்கையிடும் போதுதானே மறைக்க வேண்டும் என நினைக்கத் தோன்றும்? எனவே நாம் கிறிஸ்துவின் தூதர்களாகிய குருக்களிடம் நம் பாவங்களை அறிக்கையிடுவோம்.*

## பாவசங்கீர்த்தனம் செய்யும் முறை

மூவொரு இறைவா, நான் பாவி. எனது சொல், செயல், சிந்தனைகளால் உமதன்புக்கும், பிறர்அன்புக்கும் எதிராகவும், எனது உடலுக்கும், ஆன்மாவுக்கும் எதிராக பாவங்கள் பல செய்தேன். என் மீது இரங்கும். நான் செய்த பாவங்கள் அனைத்தையும் உணர்த்தி எனக்கு மெய்யான மனதுருக்கத்தைத் தாரும் என்று இறைவனின் கிருபைக்கு மன்றாடுக.

கீழே உள்ள அட்டவணையில் சில பாவங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றை வாசித்துச் செய்த தவறுகளை நினைவில் கொள்க.

1. **நானே உன் கடவுள், என்னைத் தவிர வேறு தேவன் உனக்கில்லை. யாத் (விப) 20:2-6, மத் 22:37**

    - ❖ அந்நிய தெய்வங்களை வணங்கினேன் / வழிபாட்டில் கலந்து கொண்டேன். **யாத் (விப) 22:20**
    - ❖ நேர்ச்சை செய்தேன் / காணிக்கை செலுத்தினேன்/ கயிறு, தாயத்து வாங்கிக் கட்டினேன்.
    - ❖ பலி செலுத்தினேன் / உணவு படைத்தேன்/ படைத்தவற்றை உண்டேன். **1 கொரி 10:20**
    - ❖ ஜோசியம் / ஜாதகம் / ராசிபலன் / காலநேரம் / நாள் நட்சத்திரம் / மணப் பொருத்தம் பார்த்துச் செயல்பட்டேன். **உபா (இச) 18:9-11**
    - ❖ தீபதூப ஆராதனை செய்தேன் / கண் திருஷ்டி கழித்தேன்.
    - ❖ பில்லி சூனியம்/ ஏவல் மூலம் பிறர்வாழ்வைக் கெடுத்தேன்/ பொருள் சம்பாதித்தேன். **கலா 5:20, வெளி (திவெ) 22:15**

**2. உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே.** **உபா (இச) 5:11**

- ❖ கடவுள் / புனிதர் பெயரால் பொய் ஆணையிட்டேன்.
- ❖ துன்பதுயரத்தில், கடவுளைப் பழித்துப் பேசியிருக்கிறேன். **சீரா (சீஞா) 23:11**
- ❖ பொய் ஆணையிட்டுச் சாபத்தைப் பெற்றேன். **மத் 5:33**
- ❖ நேர்ந்து கொண்டதைக் கடவுளுக்குச் செய்யவில்லை. **மத் 5:33**
- ❖ குருக்கள், கன்னியர்கள், இறை ஊழியர்களைப் பழித்துப்பேசியிருக்கிறேன் / தவறாகப்பேசி இருக்கிறேன் / பெயரைக் கெடுத்திருக்கிறேன் / இடறலாய் இருந்திருக்கிறேன் / தீங்கிழைத்திருக்கிறேன். **சங் 104 (திபா 105):15, சீரா (சீஞா)7:31-33**

**3. ஓய்வு நாளைத் தூயதாகக் கடைபிடிப்பதில் கருத்தாயிரு.** **உபா (இச) 5:14,15**

- ❖ ஞாயிறு திருப்பலி காரணமின்றி தவறினேன்.
- ❖ தகுந்த தயாரிப்பின்றி நற்கருணை வாங்கினேன். **1 கொரி 11:27-29**
- ❖ ஒருசந்தி சுத்தபோசன நாட்களை அனுசரிக்கத் தவறினேன்.
- ❖ பாஸ்கு கடன் தவறினேன்.
- ❖ சோம்பித்திரிந்தேன். **2 தெச 3:6, பழ (நீமொ) 6:6-11**

**4. தந்தையையும் தாயையும் மதித்துநட.** **யாத் (விப)20:12, உபா 5:16**

- ❖ பெற்றோர்களுக்கும், மேலதிகாரிகளுக்கும் கர்த்தருக்குள் கீழ்ப்படியாமல் / மரியாதையில்லாமல் நடந்தேன். **எபே 6:1,2**

- ❖ இறை ஊழியர்கள், பெரியோர்களின் அறிவுரைகளைப் புறக்கணித்தேன். **பழ (நீமொ) 13:13,18**
- ❖ பெற்றோரை சபித்தேன், தீங்கிழைத்தேன். **லேவி 20:9**
- ❖ சொல்லால், செயலால் பெற்றோர், பெரியோர் மனதைப் புண்படுத்தினேன். **1 திமோ 1:9**
- ❖ பெற்றோரை உதாசினம் செய்தேன். நோயில் / முதுமையில் பராமரிக்கத்தவறினேன். **பழ (நீமொ) 23:22**
- ❖ பிள்ளைகளைப் பராமரிக்கவும் ஒழுக்கத்தில் வளர்க்கவும் தவறினேன். **எபே 6:4, 1 திமோ 3:4**

**5. கொலை செய்யாதே. யாத் (விப) 20:13**

- ❖ கொலை செய்தேன் / உடந்தையாயிருந்தேன்.
- ❖ கருச்சிதைவு செய்தேன் / முயற்சித்தேன் / உடந்தையாக இருந்தேன். **ஞான (சாஞா) 12:6**
- ❖ பிறர் பெயரைக் கெடுத்தேன் / பழி சுமத்தினேன் / பிறரை மன்னிக்கவில்லை / பழிவாங்கினேன் பழிவாங்கும் எண்ணம் கொண்டேன். **மத் 6:14**
- ❖ பிறருக்குத் தீங்குசெய்தேன் / அடித்துக் காயப்படுத்தினேன்.
- ❖ எளியோரை / அநாதைகளை / கைம்பெண்களை ஒடுக்கினேன். **எரே 7:6**
- ❖ தற்கொலைக்கு முயற்சித்தேன் / எண்ணம்கொண்டேன் பிறர் தற்கொலைக்குக் காரணமானேன். **உபா (இச) 21:23**
- ❖ பிறர் அழிவில் மகிழ்ந்தேன். **பழ (நீமொ) 17:5**

**6. மோகபாவம் செய்யாதே. யாத் (விப) 20:14**

- ❖ பிறருடன் கற்புக்கு எதிரான பாவம் செய்தேன் / பிறர் பாவத்தில் விழ காரணமாயிருந்தேன்.
- ❖ இரத்த உறவுமுறை கொண்டோருடன் விபச்சாரம் செய்தேன். **1 கொரி 6:9-10, லேவி 18:6**
- ❖ சிறுவர், சிறுமியரை, மாசற்றோரை, எளியோரை, நெருக்கமானவர்களை ஏமாற்றி என் இச்சைக்கு இணங்க வைத்தேன். **மாற் 9:42, 2 இராய (பேதுரு) 2:18**

- ❖ சுயஇன்பம் அனுபவித்தேன். **1 கொரி 6:9,** ***CCC n. 2352.***
- ❖ ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டேன் / உடந்தையாக இருந்தேன். **உரோ 1:27, 1 திமோ 1:10, யூதா 1:7**
- ❖ விலங்குகளோடு புணர்ந்தேன். **யாத் (விப) 22:19**
- ❖ பெண்ணை விலங்கைப்போல் (குனிய வைத்து) புணர்ந்தேன். **எபி 13:4,** ***CCC n. 2351, 2352.***
- ❖ கற்புக்கு எதிரான சிந்தனைக்கு இடங்கொடுத்தேன். **மாற் 7:21**
- ❖ இச்சையைத் தூண்டும் சினிமா / தொலைக்காட்சி / இணையதளம் / புத்தகம் / நண்பர்கள் இப்படிப் பழக்கவழக்கங்களில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன்.
- ❖ இருவகை அர்த்தம் கொண்ட இச்சையான பேச்சுக்களைப் பேசி மகிழ்ந்தேன். **பழ (நீமொ) 17:20**
- ❖ கண்ணடக்கமில்லாமல் பிறரை இச்சையுடன் நோக்கினேன். **மத் 5:28**
- ❖ குடிவெறி காமக்களியாட்டங்களில் ஈடுபட்டேன் / என்னைச் சார்ந்தவர்களுக்குத் தீங்கிழைத்தேன். **கலா 5:21**
- ❖ காமஇச்சையினால் இயல்புக்கு மாறாக என் நாவினால் ஆண், பெண் பிறப்பு உறுப்பை நக்கினேன். **ரோமர்1:24-26,** ***CCC n. 2351, 2352.***
- ❖ இயல்புக்கு மாறான காமவேட்கையோடு மணவாழ்வில் தாறுமாறாய் இருந்தேன். **ஞான (சாஞா) 14:26**

**7. களவு செய்யாதே. யாத் (விப) 20:15**

- ❖ களவு செய்தேன். (களவு செய்தவற்றை திரும்பக் கொடுக்கச் சம்மதிக்கிறேன்). **எசே 33:15**
- ❖ சொந்த வீட்டிலேயே திருடினேன்.
- ❖ லஞ்சம் வாங்கினேன். **யாத் (விப) 23:8**
- ❖ அநியாய வட்டி வாங்கினேன். **பழ (நீமொ) 28:8**
- ❖ முறையற்ற வகையில் பொருள் சேர்த்தேன். **எரே 6:13**
- ❖ கள்ளத்தராசு போன்ற முறையற்ற அளவுகளை உபயோகித்தேன். **ஆமோ 8:5**

*( CCC - Catechism of the Catholic Church )*

**8. பொய்ச் சான்று சொல்லாதே யாத் (விப) 20:16**

- பொய்ச்சாட்சி சொன்னேன்.
- நீதியைப் புரட்டிப் பேசினேன். **இசை (எசா) 5:23**
- திரித்துப்பேசினேன் / அபாண்டமாகப் பழி சுமத்தினேன். **யாத் (விப) 23:1,2**
- பொய்/கோள் சொன்னேன்/புறணி பேசினேன். **சீரா (சீஞா) 7:14**
- ஒருதலைப்பட்சமாகச் செயல்பட்டேன். **பழ (நீமொ) 24:24**
- நயவஞ்சகமாகப் பேசி பிறரை ஏமாற்றினேன். **பழ (நீமொ) 24:28**
- தவறாகப் பேசி, பிறர் உறவில் பிரிவினை உண்டாக்கினேன். **பழ (நீமொ) 17:9**

**9. பிறர் மனைவியை விரும்பாதே யாத் (விப) 20:17**

- பிறர் மனைவியுடன் விபச்சாரம் செய்தேன் / உடந்தையாயிருந்தேன். **லேவி 18:20 / 20:10**
- சகோதரன் மனைவியை / சகோதரி கணவனை தன் உரிமையாகப் பாவித்துப் பாவம் செய்தேன். **லேவி 18:16-18**
- கணவனுக்கு / மனைவிக்குத் துரோகம் செய்தேன். **மத் 19:9**
- பிறன் மனைவியை இச்சையோடு நோக்கினேன். **உபா (இச)5:21**
- கணவன் - மனைவிக்கிடையே பிரிவினை உண்டாக்கினேன்.
- குடும்ப ஒற்றுமையைச் சீர்குலைத்தேன்.

**10. பிறர் பொருட்களைக் கவர்ந்திட விரும்பாதே. யாத் (விப) 20:17**

- பிறர் பொருட்களைக் கவர்ந்தேன் / கவர்ந்திட முயற்சித்தேன் / சேதப்படுத்தினேன்.
- பிறரை ஏமாற்றி மோசடி செய்து பொருள் சேர்த்தேன். **பழ (நீமொ) 10:2**
- பிறர் பிழைப்பைக் கெடுத்தேன். **சீரா (சீஞா) 34:22**

**L தலையான பாவங்களாவன**

ஆங்காரம், கோபம், மோகம், லோபித்தனம், போசனப்பிரியம், காய்மகாரம், சோம்பல்.

**L உள்ளத்திலிருந்து வந்து மனிதரைத் தீட்டுப்படுத்துவது**

**மாற் 7:20-23**

தீய எண்ணம், மோகம், களவு, கொலை, விபசாரம், பேராசை, தீச்செயல், கபடு, கெட்ட நடத்தை, பொறாமை, பழிச்சொல், செருக்கு, மதிகேடு.

**L இறையாட்சியின் உரிமையை இழப்பவர்கள்**

**1 கொரி 6:9,10**

அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்ப தில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள் வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபச்சாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக் காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.

**L இறுதி நாட்களில் மக்களின் போக்கு. 2 திமோ 3:2-5**

தன்னலப்பிரியர், பொருளாசை பிடித்தவர், வீம்புக்காரர், செருக்குடையவர், பழித்துப்பேசுபவர், பெற்றோருக்கு அடங்காதவர், நன்றி கொன்றவர், இறைவனைப் புறக்கணிப்பவர், பரிவில்லாதவர், தீராப் பகையினர், புறணி பேசுபவர், தன்னடக்கமற்றவர், கொடியவர், நல்லதை வெறுப்பவர், நம்பிக்கைத் துரோகிகள், மூர்க்கர், இறுமாப்புடையவர் என்று இவ்வாறெல்லாம் இருப்பர். அவர்கள் கடவுளை நாடுவதைவிடச் சிற்றின்பங்களையே மிகுதியாய் நாடுவர். பக்தியின் வெளித்தோற்றத்தைக் கொண்டிருப்பார்கள். ஆனால் அதன் உள்ளாற்றலைப் பொருட்படுத்த மாட்டார்கள். இவர்களுடன் சேராதீர்.

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்து செய்த தவறுகளை நினைவு கூர்ந்து மெய்யான மனதுருக்கத்துடன், இறைவா, உமது கிருபையினால் இனிமேல் பாவம் செய்யாதிருக்க தீர்மானிக்கிறேன் என்ற திடமான மனஉறுதியுடன்

**(குருவிடம் வந்து முழந்தாலிட்டு),**

சுவாமி நான் பாவி, என்னை மன்னியுங்கள். நான் பாவசங்கீர்த்தனம் செய்து .... நாட்கள் (வாரங்கள், மாதங்கள், வருடங்கள்) ஆகின்றன என்று கூறி, செய்த பாவங்கள் அனைத்தையும் (ஒன்றையும் மறைக்காமல்) முறைப்படி தெளிவாக அறிக்கையிடவும்.

எத்தனை முறை என்பதை ஒரு முறை அல்லது இருமுறை அல்லது பல முறை என்று குறிப்பிடுக. அனைத்தையும் அறிக்கையிட்டபின் மேலும் மறந்து போன பாவங்களுக்காகவும் மனம் வருந்தி மன்னிப்புக்கேட்கிறேன் என்று கூறி முடிக்கவும்.

குரு கூறும் அறிவுரைகளையும், பாவப் பரிகாரத்தையும் கவனமாகக் கேட்டபின் உத்தமமனஸ்தாப மந்திரம் சொல்ல வேண்டும். குரு ஆசிர் அளித்தபின், அவருக்கு நன்றி கூறி விடைபெறுக.

## உத்தம மனஸ்தாப மந்திரம்

என் சர்வேசுராசுவாமி தேவரீர் அளவில்லாத சகல நன்மையும் அன்பும் நிறைந்தவராகையால், எல்லாவற்றிற்கும் மேலாக உம்மை நான் முழுமனதோடு நேசிக்கிறேன். இப்படிப்பட்ட தேவரீருக்குப் பொருந்தாத பாவங்களைச் செய்தேனே என்று மிகவும் மனம் நொந்து மெத்த மனஸ்தாபப்படுகிறேன். எனக்கிதுவே மனஸ்தாப மில்லாமல் வேறே மனஸ்தாபமில்லை. எனக்கிதுவே துக்கமில்லாமல் வேறே துக்கமில்லை. இனிமேல் ஒருபொழுதும் இப்படிப்பட்ட பாவங்களைச் செய்வதில்லை என்று உறுதியான மனதுடனே பிரதிக்கினை செய்கிறேன். மேலும் எனக்குப் பலம் போதாமையால், இயேசுநாதர் சுவாமி பாடுபட்டுச் சிந்தின திரு இரத்தப் பலன்களைப் பார்த்து என் பாவங்களை எல்லாம் பொறுத்து, எனக்கு உம்முடைய வரப்பிரசாதங்களையும் மோட்ச பாக்கியத்தையும் தந்தருள்வீர் என்று முழு மனதோடு நம்பியிருக்கிறேன். திருச்சபை விசுவசித்துக் கற்பிக்கிற சத்தியங்களையெல்லாம் தேவரீர் தாமே அறிவித்திருப்பதால் நானும் உறுதியாக விசுவசிக்கிறேன்.

- ஆமென்.

# 14. ஜெபமே ஜெயம்.

## 14.1 கர்த்தர் கற்பித்த ஜெபம்

பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே / உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக / உம்முடைய இராஜ்ஜியம் வருக / உம்முடைய சித்தம் / பரலோகத்தில் செய்யப்படுவது போல / பூலோகத்திலும் செய்யப்படுவதாக.

எங்கள் அனுதின உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும் / எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பதுபோல / எங்கள் பாவங்களைப் பொறுத் தருளும் / எங்களைச் சோதனையில் விழ விடாதேயும் / தீமையிலிருந்து எங்களை இரட்சித்தருளும். - ஆமென்.

## 14.2 பரிசுத்த ஆவி ஜெபம்

பரிசுத்த ஆவியே / தேவரீர் எழுந்தருளி வாரும். பரலோகத்திலே நின்று / உம்முடைய திவ்ய பிரகாசத்தின் கதிர்களை வரவிடும். தரித்திரர்களுடைய பிதாவே / கொடைகளைக் கொடுக்கிறவரே/இருதயங்களின் பிரகாசமே எழுந்தருளிவாரும். உத்தம ஆறுதலானவரே / ஆத்துமங்களுக்கு மதுரமான விருந்தாளியே/ பேரின்ப இரசமுள்ள இளைப்பாற்றியே / பிரயாசத்தில் சுகமே / வெயிலிற் குளிர்ச்சியே / அழுகையில் தேற்றரவே / எழுந்தருளிவாரும். வெகு ஆனந்தத்தோடே கூடியிருக்கிற பிரகாசமே / உமது விசுவாசிகளுடைய இருதயங்களின் உற்பனங்களை நிரப்பும். உம்முடைய தெய்வீகமின்றியே மனிதரிடத்தில் குற்றமில்லாதது ஒன்றுமில்லை. அசுத்தமாயிருக்கிறதைச் சுத்தம் பண்ணும் / உலர்ந்ததை நனையும் / நோவாயிருக்கிறதைக் குணமாக்கும் /

வணங்காததை வணங்கப் பண்ணும்/ குளிரோடிருக் கிறதைக் குளிர் போக்கும் / தவறினதை செவ்வனே நடத்தும்/ உம்மை நம்பின உம்முடைய விசுவாசிகளுக்கு உம்முடைய திருக்கொடைகள் ஏழும் கொடுத்தருளும். புண்ணியத்தின் பேறுகளையும்/ நல்ல மரணத்தையும்/ நித்திய மோட்சானந்த சந்தோஷத்தையும்/ எங்களுக்குத் தந்தருளும் - ஆமென்.

### 14.3 உலகின் பாவங்களைப் போக்கும் செம்மறி

உலகின் பாவங்களைப் போக்கும் சர்வேசுரனுடைய செம்மறியே, எங்கள் மேல் இரக்கமாயிரும்.

உலகின் பாவங்களைப் போக்கும் சர்வேசுரனுடைய செம்மறியே, எங்கள் மேல் இரக்கமாயிரும்.

உலகின் பாவங்களைப் போக்கும் சர்வேசுரனுடைய செம்மறியே, எங்களுக்குச் சமாதானம் தந்தருளும்.

### 14.4 விசுவாசப் பிரமாணம்

பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த / எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரனை விசுவசிக்கிறேன். அவருடைய ஏக சுதனாகிய / நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவசிக்கிறேன். இவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாய் உற்பவித்து புனித கன்னி மரியிடமிருந்து பிறந்தார். போஞ்சு பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டுச் சிலுவையில் அறையுண்டு / மரித்து / அடக்கம் செய்யப்பட்டார். பாதாளத்தில் இறங்கி / மூன்றாம் நாள் / மரித்தோரிடமிருந்து / உயிர்த்தெழுந்தார். பரலோகத்திற்கு எழுந்தருளி / எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரனுடைய வலதுபக்கத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து / ஜீவியரையும்

மரித்தவரையும் நடுத்தீர்க்க மாட்சிமையுடன் வருவார். பரிசுத்த ஆவியை விசுவசிக்கிறேன். பரிசுத்த கத்தோலிக்கத் திருச்சபையை விசுவசிக்கிறேன். ஆண்டவருடைய புனித ஸ்தலத்தில் உள்ள புனிதர்களை ஏற்றுக் கொள்கிறேன். பாவப் பொறுத்தலை விசுவசிக்கிறேன். சரீர உத்தானத்தை விசுவசிக்கிறேன். நித்திய ஜீவியத்தை விசுவசிக்கிறேன்.

- ஆமென்.

## 14.5 மங்கள வார்த்தை ஜெபம்

அருள் நிறைந்த மரியே வாழ்க! கர்த்தர் உம்முடனே, பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே, உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே.

அர்ச்சிஷ்ட மரியாயே, சர்வேசுரனுடைய மாதாவே பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும். - ஆமென்.

## 14.6 கிருபைதயாபத்து மந்திரம்

கிருபைதயாபத்துக்கு மாதாவாயிருக்கிற எங்கள் இராக்கினியே வாழ்க. எங்கள் ஜீவியமே, எங்கள் தஞ்சமே, எங்கள் மதுரமே வாழ்க! பரதேசிகளாயிருக்கிற நாங்கள் ஏவாளின் மக்கள், உம்மை பார்த்துக் கூப்பிடுகிறோம். இந்தக் கண்ணீர்க் கணவாயிலே நின்று பிரலாபித்தழுது உம்மை நோக்கிப் பெருமூச்சு விடுகிறோம். ஆதலால் எங்களுக்காக எப்பொழுதும் வேண்டி மன்றாடுகிற தாயே, உம்முடைய தயாளமுள்ள திருக்கண்களை எங்கள் பேரில் திருப்பியருளும். இதன்றியே நாங்கள் இந்தப் பரதேசங்கடந்த பிற்பாடு

உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுநாதருடைய பிரத்தியட்சமான தரிசனத்தை எங்களுக்குத் தந்தருளும். கிருபாகரியே தயாபரியே பேரின்ப இரசமுள்ள கன்னிமரியாயே / இயேசுகிறிஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களாயிருக்கத்தக்கதாக சர்வேசுரனுடைய பரிசுத்த மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். - ஆமென்.

### 14.7 மிகவும் இரக்கமுள்ள தாயே

மிகவும் இரக்கமுள்ள தாயே! இதோ உம்முடைய அடைக்கலமாக ஓடிவந்து, உமது உபகார சகாயங்களின் உதவியை இரந்து கேட்ட ஒருவனாகிலும் உம்மால் கைவிடப்பட்டதாக உலகில் ஒருபோதும் சொல்லக் கேள்விப்பட்டதில்லையென்பதை நினைத்தருளும். கன்னியருடைய இராக்கினியான கன்னிகையே, என் தயையுள்ள தாயே, இப்படிப்பட்ட நம்பிக்கையால் ஏவப்பட்டு உமது திருப்பாதத்தை அண்டி வந்து நிற்கிறேன். பெருமூச்செரிந்தழுது நிற்கிற பாவியாகிய நான் உமது தயாளத்துக்குக் காத்துகொண்டு உமது சமூகத்திலே நிற்கிறேன். அவதரித்த வார்த்தையின் தாயே, என் மன்றாட்டைப் புறக்கணியாமல் தயாபரியாய்க்கேட்டுக் கிருபைபுரிந்தருளும். ஆமென்.

ஜென்மப்பாவமில்லாமல் உற்பவித்த அர்ச்சிஷ்ட மரியாயே! பாவிகளுக்கு அடைக்கலமே! இதோ உம்முடைய அடைக்கலமாக ஓடி வந்தோம்; எங்கள் பேரில் இரக்கமாயிருந்து எங்களுக்காக உம் திருக்குமாரனிடம் வேண்டிக்கொள்ளும். (3 முறை)

அருள் நிறைந்த மரியே (3 முறை)

## 14.8 இயேசுவின் திருஇருதய ஜெபமாலை

கிறிஸ்துவின் திருஆத்துமமே, என்னைப் பரிசுத்த மாக்கும். கிறிஸ்துவின் திருச்சரீரமே என்னை இரட்சித்தருளும். கிறிஸ்துவின் திருஇரத்தமே, என்னை நிறைவித்தருளும். கிறிஸ்துவின் திருவிலாவிலிருந்து வந்த திருநீரே, என்னைக் கழுவியருளும். கிறிஸ்துவின் திருப்பாடுகளே, என்னைத் தேற்றுங்கள். ஓ! நல்ல இயேசுவே! எனக்குச் செவிசாய்த்தருளும்.

உமது திருக்காயங்களுக்குள்ளே என்னை மறைத்தருளும். உம்மைவிட்டு என்னைப் பிரியவிடாதேயும். தீய எதிரியிடமிருந்து என்னைக் காத்தருளும். என் மரணநேரத்தில் என்னை அழைத்து, உமது புனிதர்களோடு எக்காலமும் உம்மைப் புகழ எனக்கு கற்பித்தருளும்.

- ஆமென்.

**பெரிய மணியில் :**

இருதயத்தில் தாழ்ச்சியும் மனதில் சாந்தமும் நிறைந்த ஆண்டவராகிய இயேசுவே / என் இருதயத்தை தேவரீருடைய திருஇருதயத்துக்கு ஒத்ததாகப் பண்ணியருளும்

**சிறியமணியில் :** இயேசுவின் மதுரமான திருஇருதயமே! என் சிநேகமாயிரும்.

**பத்துமணி முடிந்தபின் :** மரியாயின் மாசற்ற இருதயமே! என் இரட்சணியமாயிரும்.

**ஒவ்வொரு பத்து மணி ஜெபமும், கீழ்க்கண்ட கருத்துக்களுக்காகச் சொல்லப்பட வேண்டும்.**

**1-ம் பத்துமணி -** பிற சமயத்தினரும், பிரிந்துபோன சகோதரர்களுமான மக்களால் அவருக்குண்டாகும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக.

**2-ம் பத்துமணி -** பொல்லாத கிறிஸ்தவர்களால் அவருக்கு உண்டாகும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக.

**3-ம் பத்துமணி -** நாம்தாமே அவருக்கு உண்டாக்கும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக.

**4-ம் பத்துமணி -** சகல மனிதராலும் அவருக்கு உண்டாகும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாகவும், பரிசுத்த தேவமாதா சகல புனிதர்களுடைய சிநேகப் பற்றுதலோடு நாமும் நம்முடைய இருதயத்தை ஒப்புக்கொடுப்போம்.

**5-ம் பத்துமணி -** இயேசுவின் திருஇருதயமே! நாங்களும் மற்றவர்களும் சிநேகிக்கும்படி அநுக்கிரகம் செய்தருளும்.

**ஐம்பது மணி முடிந்தபின் :**

இயேசுவின் திருஇருதயமே! எங்கள் பேரில் இரக்கமாயிரும். ஜென்ம மாசின்றி உற்பவித்த புனித மரியாயின் மாசற்ற இருதயமே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். இயேசுநாதருடைய திருஇருதயம், எங்கும் சிநேகிக்கப் படுவதாக. என் இயேசுவே! இரக்கமாயிரும். திருஇருதயத்தின் சிநேகிதராகிய புனித சூசையப்பரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். - ஆமென்.

### 14.9 இறை இரக்கத்தின் ஜெபமாலை

இயேசுவே! நீர் மரித்தீர். ஆனால் இந்த மரிப்பு ஆன்மாக்களின் வாழ்க்கை ஊற்றாகவும் இரக்கத்தின் கடலுமாகவும் வழிந்தோடியது. ஓ! வாழ்வின் ஊற்றே! கண்டுபிடிக்க முடியாத இறைவனின் இரக்கமே உலக முழுவதையும் உம்முள் அடக்கி உமது இரக்கம் முழுமையும் எம்மீது பொழிந்தருளும்.

இயேசுவின் இருதயத்திலிருந்து இரக்கத்தின் ஊற்றாக வழிந்தோடிய இரத்தமே! தண்ணீரே! உம் மீது நம்பிக்கை வைக்கிறேன். **(மூன்று முறை)**

- **கர்த்தர் கற்பித்த ஜெபம்**
- **மங்கள வார்த்தை ஜெபம்**
- **விசுவாசப் பிரமாணம்**

**ஜெபமாலையின் பெரியமணியில் :**

நித்திய பிதாவே! உமது நேசக்குமாரனாகிய எமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உடலையும், உதிரத்தையும், ஆன்மாவையும், தெய்வீகத்தையும், எமது பாவங்களுக்காவும், அகில உலகின் பாவங்களுக்காகவும், பரிகாரமாக உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம்.

**ஜெபமாலையின் சிறிய மணியில் :**

இயேசுகிறிஸ்துவின் வேதனை நிறைந்த பாடுகள் வழியாக எங்கள் மீதும், அகில உலகின் மீதும் இரக்கமாயிரும்.

**ஐம்பது மணி முடிந்தபின் :**

தூய இறைவா, தூய எல்லாம் வல்லவரே, தூய நித்தியரே, எங்கள் மீதும் அகில உலகின் மீதும் இரக்கமாயிரும். **(மூன்று முறை).**

**கடைசி ஜெபம் :**

இரக்கமுள்ள இயேசுவே உம்மை நாங்கள் விசுவசிக்கிறோம். உம்மில் எங்கள் நம்பிக்கையை வைக்கிறோம்.

எங்கள் பலவீனத்திலும், இயலாமையிலும், எங்களுக்கு உதவியாக வாரும். நீர் எல்லோராலும் அறியப் படவும், நேசிக்கப்படவும் செய்ய எங்களுக்கு வரம் தாரும். அணைகடந்த உமது அன்பில் நம்பிக்கை வைக்கவும், உமது மகிமைக்காகவும், எங்கள் மீட்புக்காகவும், உலகிலும் எம்மிலும் உள்ள தீயசக்திகளை முறியடிக்கவும் எமக்கு வரமருளும்.

### 14.10 என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி

என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி; என் முழு உள்ளமே கர்த்தரின் பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி, என் ஆத்துமாவே கர்த்தரையே ஸ்தோத்தரி; கர்த்தர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.

**சங் 102 (திபா 103):1,2**

### 14.11 திரித்துவப் புகழ்

**பிதாவுக்கும், சுதனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக. ஆதியிலே இருந்ததுபோல / இப்பொழுதும் / எப்பொழுதும் / என்றென்றும் / இருப்பதாக - ஆமென்.**

# 15. தூய ஆவியானவர் அருளும் கொடைகள்

## I. தூய ஆவியின் கனிகள்

அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், விசுவாசம், சாந்தம், தன்னடக்கம். **கலா 5:22**

கடவுளுடைய ஆவியின் ஏவுதலால் பேசும்போது, 'இயேசுவுக்குச் சாபம்' என்று யாரும் சொல்லுவதில்லை. அப்படியே பரிசுத்த ஆவியின் ஏவுதலாலன்றி 'இயேசு ஆண்டவர்' என்று யாரும் சொல்லமுடியாது.

வரங்கள் பலவகை; ஆவியானவரோ ஒருவர்தான். திருப்பணிகள் பலவகை; ஆண்டவரோ ஒருவர்தான். அவரே அனைத்தையும் அனைவரிலும் செயலாற்றுகிறார். ஆவியானவரின் செயல் வெளிப்படும் ஆற்றல் அவனவனுக்கு அருளப்படுவது பொது நன்மைக்காகவே. ஒருவனுக்கு ஆவியின் வழியாக ஞானம் நிறைந்த பேச்சு அருளப்படுகிறது. மற்றவனுக்கு அறிவு செறிந்த பேச்சு அளிக்கப்படுவது அதே ஆவியின் ஆற்றலால் தான். வேறொருவனுக்கு விசுவாசம் அருளப்படுவது அதே ஆவியால்தான். பிறிதொருவனுக்கு நோய்களைக் குணமாக்கும் வரம் கிடைப்பது அந்த ஒரே ஆவியால்தான். ஒருவனுக்குப் புதுமை செய்யும் ஆற்றலும், இன்னொருவனுக்கு இறைவாக்கு வரமும், வேறொருவனுக்கு ஆவிகளைத் தேர்ந்து தெளியும் திறனும், வேறொருவனுக்குப் பல்வகைப் பரவசப் பேச்சும், பிறிதொருவனுக்கு அதை விளக்கும் திறனும் கிடைக்கின்றன. இவற்றையெல்லாம் தம் விருப்பம்போல் ஒவ்வொருவருக்கும் பகிர்ந்தளித்துச் செயலாற்றுகிறவர் அந்த ஒரே ஆவிதான்.

**1 கொரி 12:3-11**

**தூய ஆவியினால் ஆட்கொள்ளப்பட்ட விசுவாசிகளிடம் காணப்படும் உடலியல், உணர்வியல் மற்றும் ஆன்மீகவியல் சார்ந்த செயல்பாடுகளாவன.**

## 15.1 உடலியல் சார்ந்த வெளிப்பாடுகள்.

- **நடுங்குதல் மற்றும் குலுங்குதல்**

மக்கள் துணி பொம்மை போல் ஆட்டங்கொள்வார்கள் அல்லது காற்றில் பறக்கும் இலையைப் போல நடுங்குவார்கள். குலுங்குதல், நடுங்குதல் போன்ற சொற்களை/ ஒத்த வசனமுள்ள/ வேதத்தைக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால், இந்தக் காரியங்களைத் தேவனே செய்விக்கிறார் என்பது புலனாகும். **தானியேல் 10:7-10**

- **துள்ளுதல், குதித்தல், உயர எழும்புதல் அல்லது சுற்றிவருதல்**

சிலர் கட்டுப்படுத்த முடியாதபடி உயரக்குதித்து பந்துபோல் கீழே வருவார்கள். சிலர் திடீரென்று குதிப்பார்கள். மற்றவர்கள் மேலே எழும்புவார்கள் அல்லது கைப் பாவை போலச் சுற்றிவருவார்கள் **எசே 2:2, 3:24**

- **ஊதுதல்**

சிலர் ஊதுவார்கள். ஒருவித ஒலியுண்டாக்குவார்கள். இந்தச் செயல், ஆவியினால் என்ன நடக்கிறது என்பதற்கு ஒரு பாடம் போன்றது. இந்த வெளிப்பாடு தேவன் ஆசீர் வாதத்தை வீசுகிறார் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது அல்லது யாராவது ஒருவர் மீது ஆவியின் வெளிப்பாடுள்ளது என்பதைச் சுட்டுகிறது. இயேசு சீடர்கள் மீது ஊதி அவர்களிடம் “பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்” என்றார். **அரு (யோவா) 20:22**

========================================

### ∟ உடலில் சூடு உண்டாதல் ஒருவித அதிர்வு ஏற்படுதல்

கைகள் அல்லது உதடுகள் போன்ற உடல் உறுப்புகளில் சூடு உண்டாகும் அல்லது மின்னதிர்வு போல் ஒரு சிறு அதிர்வு ஏற்படும். சில சமயங்களில் இது சில வரங்களை அல்லது ஊழியங்களை அதாவது சுவிசேஷ ஊழியம் அல்லது சுகமாக்குதல் போன்றவற்றைக் கொடுப்பதைச் சுட்டிக்காட்டும். ஒருவேளை இவைகள் ஆவியின் பிரசன்னத்தை உணர்த்தும் அடையாளமாகவும் இருக்கக்கூடும். முகங்குப்புற விழுந்த நிலையிலிருந்து எழுவதற்குப் பெலன் இல்லாதபடி, தேவனுடைய பிரசன்னத்தின் பளுவானது அநேகரைக் கீழே அழுத்தியிருக்கிறது. தரையில் பசை போட்டு ஒட்டியது போல சிலர் மணிக்கணக்காக அப்படியே கிடப்பார்கள்.

**தானியேல் 10:7,9,17**

### ∟ ஆவியில் நடனமாடுதல்

தாவீது தனது முழுப்பெலத்தோடும் ஆண்டவருக்கு முன்பாக நடனம் ஆடினார். **(2 சாமு. 6:14)** பரிசுத்த ஆவியானவரால் ஆடல் அசைவுகளைப் பெறுமளவுக்கு, மக்களைத் தேவன் நிரப்புவது உண்டு.

### ∟ ஆவியில் அடித்துத் தள்ளப்படுதல்

கடல் அலையால் அடித்துத் தள்ளப்பட்டதைப் போல நூற்றுக்கணக்கான மக்கள் ஆவியின் வல்லமையினால் கீழே விழுந்து கிடப்பார்கள். **அரு (யோவா) 18:6, திவெ. 1:17**

**⎿ வேகமாய்ச் சுழலுதல் அல்லது ஓடுதல்**

சிலர் வேகமாய்ச் சுழல்வார்கள். அதிர்ச்சியால் கலக்கமுறுவார்கள். ஓடுவார்கள், குதிப்பார்கள், துடிப்பாய் நடனமாடுவார்கள் - இவை அசாதாரணமாக நடக்கும். (மகிழ்ச்சியளிக்கும்) இதற்கெல்லாம் சரியான ஒரே விளக்கம், தெய்வீகம் என்னும் விளக்கமே.

**⎿ வெட்டுதல், சுழற்றுதல் போன்றவை**

சிலர் கராத்தே சண்டையிடுபவர்களைப் போன்று பட்டயத்தை கையில் இருக்கிப் பிடித்திருப்பதை போன்று ஆகாயத்திலேயே வெட்டுவார்கள், சுழற்றுவார்கள். இந்த வெளிப்பாடு ஆன்மீகப் போராட்டத்தையும் கட்டுக்களை உடைப்பதையும் சுட்டிக்காட்டுகிறது.

**⎿ கண்ணிமைகள் படபடத்தல்**

இது மிகவும் சாதாரணமான வெளிப்பாடுகளில் ஒன்று. ஆவியானவரின் விசேஷமான பிரசன்னத்தை இது சுட்டிக் காட்டும். சில சமயங்களில் இந்த வெளிப்பாடு மிக வேகமாய் இருக்கும். அதன்பின் அந்த நபரின் கண்கள் குழிகளிலிருந்து வேகமாக அசைவது போலிருக்கும். அந்த கண்களை மீண்டும் எடுத்து வைப்பது போலத்தோன்றும். தீர்க்கதரிசன உள்நோக்கு அவர்களுக்கு அதிகரிப்பது பின்னர் தெரியவரும்.

**⎿ பிரசவ வேதனை**

சிலருக்கு உண்மையாகவே குழந்தை பிறக்க இருப்பது போல் வலி எடுக்கும். வலிகளும் வேதனைகளும் உண்மையாகவே இருக்கும். அதனால் முணங்குவார்கள். சிலர் தங்கள் மூலமாகத் தேவன் வரங்களையும், அபிஷேகங்களையும் பிறப்பிக்கிறார் என்று உணர்கிறார்கள்.

**உரோ. 8:22,23, இசை (எசா) 42:14, கலா 4:19**

## 15.2 உணர்வு சார்ந்த வெளிப்பாடுகள்.

### ∟ ஆவியில் சிரித்தல்

சிரிப்பு ஒருவருடைய தனித்தன்மையையோ அல்லது சிரிப்பை பெற்றுக்கொள்ளக்கூடிய விருப்பத்தையோ சாராமல் மணிக்கணக்காக கட்டுப்படுத்த முடியாதபடி சிலர் சிரிப்பார்கள். தன்னடக்கமுள்ளவராக இருந்தாலும், விருப்பு வெறுப்பற்றவராக இருந்தாலும் இந்த வெளிப்பாடு தோன்றலாம். இது ஆண்டவர் தந்த சந்தோஷத்தை உடல் வாயிலாகத் தெரிவிப்பதாகும். இது முன்னே இருந்த எழுப்புதல் சிரிப்பினைப் போன்றது. **சங் 125 (திபா 126):2**

### ∟ அழுதலும் கண்ணீர் விடுதலும்

தேவன் அதிக உணர்ச்சியை அளிப்பாரானால் மிகச்சாதாரணமாக அழுவது, புலம்புவது, கண்ணீர் விடுவது, வேதனைப்படுவது போன்ற வெளிப்பாடுகள் தோன்றும். இவ்வகையான ஆசீர்வாதம் கொடுக்கும் போது மனந்திரும்புதல் எளிதில் நடைபெறும்.

சில சமயங்களில் உட்சுகம் கிடைக்கும்போது அழுகை வெளிப்படும். மற்ற சமயங்களில் இறைவனிடம் பரிந்து ஜெபிக்கும் பாரத்தைக் காட்டும்.

**அரு (யோவா) 11:33-35, எபி 5:7**

வேதம் படிக்கும் போதும், ஜெபிக்கும் போதும் தேவனின் பேரன்பை நினைக்கும் போதும், கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடிக் கொண்டே இருக்கும். எப்போதாவது ஒருவேளை இந்த அழுகையானது திடீரென சிரிப்பாகவும் மாறிவிடும்.

**∟ மகிழ்ச்சி வெள்ளம், மனநிறைவு, தைரியம் அல்லது தொழுகை**

மகிழ்ச்சி, மனநிறைவு, தைரியம், கடவுள் மேல் பற்று, தொழுகை, தியானம் போன்றவை ஆர்வத்தோடு சேர்ந்து ஒரு மனிதனை மேற்கொள்ளும். அதன் பொருள் "*தேவனால் நிரப்பப்படுதல்*" என்று கூறலாம்.

**அப்.பணி (திப) 9:1-19**

**∟ தீர்க்கதரிசன அபிநயம்**

தேவன், தாம் சொல்லவிரும்பும் சொல்லை ஒரு மனிதனுக்கு கொடுப்பதனால் அதை அவன் வெளிப்படுத்தும் முறையே தீர்க்கதரிசன அபிநயமாகும். இதில் பேசுவதைவிட தீர்க்கதரிசன வெளிப்பாடே முக்கியமாயிருக்கும். **அப்.பணி (திப) 21:10ல்** அகபு செய்ததைப் போன்றதே இது. சில சமயங்களில் பேச்சோடு வெளிப்பாடும் இருக்கும்.

## 15.3 ஆன்மீக வெளிப்பாடுகள்

**∟ தேவனுடைய மகிமையினால் "பாரப்படுதல்"**

ஆண்டவருடைய பிரசன்னம் மிகவும் அதிக மாயிருக்கும்போது மக்கள் அதன் பாரத்தை உணரும் தருணங்கள் உண்டு. அவர்கள் கீழே விழும் வரை வளைவார்கள் அல்லது மெல்ல மெல்ல தங்கள் தலை யையும் உடலையும் சாய்ப்பார்கள். தேவனுடைய மகிமை என்பதற்கு ஈடான எபிரேயச் சொல் "கவோட்த்" என்பதாகும். இதன் பொருள் தேவனுடைய "பாரம்" அல்லது "சுமை" ஆகும். எசேக்கியேலும் தானியேலும் இதை அனுபவித்திருக்கிறார்கள்.

**2 நாளா. (2 குறி) 7:3-4, 2 கொரி 4:17**

**ஆவியில் மேம்படுதல்**

தற்போது ஆவியானவரின் சந்திப்பில் இது சாதாரணமாக நிகழ்ந்து வருகிறது. ஒரு கூட்டம் நடை பெறும்போது மக்கள் ஆவியில் மேம்படுகிறார்கள். சில வேளைகளில் எவருமே தமக்காக ஜெபிக்காத பொழுது தங்கள் வீட்டில் தனித்திருந்தபோது ஆவியால் மேற்கொள்ளப் பட்டதாகச் சொல்லுவார்கள். மனநிறைவும் மகிழ்ச்சியுமான உணர்வுகளுள்ள ஓர் இதமான தன்மை மக்களிடம் பரவுகிறது. அதன்பின் அவர்கள் ஆவிக்குள்ளாகி இளைப் பாறுகிறார்கள். சுகப்படுத்துதல், நிரப்புதல், தரிசனங்கள், விடுவிப்புகள், விடுதலைகள், அதிகாரமளிப்புகள் போன்றவை பொதுவான நன்மைகளாகும். **அப்.பணி (திப) 9:31**

**பேச இயலாமை**

பேச்சாளர், பேசுவதற்கான உடல் சக்தியையும் அல்லது மன ஒருமைப்பாட்டையும் இழந்து போவதும் உண்டு. சாட்சி சொல்ல அல்லது பிரசங்கம் செய்ய முனைகிற அநேக போதகர்களுக்கும் தலைவர்களுக்கும் இவ்வாறு நிகழ்கிறது. மனமும் ஆவியும் அப்போதும் துடிப்புடன் இருக்கின்றன. ஆனால் அவர்களால் பேசமுடியாது. சில சமயங்களில் இந்தப் பேச்சின்மை சில நிமிடங்களுக்கு, மணிகளுக்கு அல்லது நாட்களுக்கு தொடர்கின்றன.

**எசே 3:26, தானி 10:15, லூக் 1:22**

**ஆவியில் குடித்தல்**

“ஆவியில் திளைத்தல்” என்பது பொதுவானதோர் அனுபவமாகிவிட்டது. குடிவெறியில் இருந்தாற்போன்று ஒரு மனிதன் நடப்பதற்கும், தெளிவாகப் பேசுவதற்குமுள்ள சக்தியை இழந்து போகிறான். ஆனாலும் கூட மதுவினைக்

குடிப்பதற்கும் ஆவியில் குடிப்பதற்கும் பெருத்த வேறுபாடு உண்டு. ஆவியில் குடிப்பதில் ஒருவருடைய மனம், உணர்வுகள், ஆவி, சித்தம் ஆகியவை முழுமையான உயிர்ப்புடனும், தேவனுடன் தொடர்புகொண்டும் இருக்கும். இந்த வெளிப்பாட்டின்போது மகிழ்ச்சி வெள்ளம், சிரிப்பு, தியானம், தொழுகை, அறிவான சொற்கள், தீர்க்கதரிசனம் ஆகியவை வெளிப்படும். சிலர் நாட்கணக்கில் ஆவியில் குடித்தவர்களாய் இருப்பார்கள். "நீங்கள் நினைப்பது போல் இவர்கள் மதுமயக்கம் கொண்டவர்களல்ல" ஆனால் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்கிறார்கள். **(அப். பணி (திப) 2:15)** என்று திருவிவிலியத்தில் வாசிக்கிறோம்.

**∟ மெய்மறந்த நிலை**

ஆவியின் வல்லமைக்குள் இருக்கையில் சிலர் தேவனுக்குள் கட்டுண்டவர்களாக மெய்மறந்ததொரு நிலையில் இருப்பார்கள். விவரித்துச் சொல்ல முடியாத நுணுக்கமான அனுபவங்களைப் பெறுவார்கள். பேதுருவும் பவுலும் மெய்மறந்த நிலையில் இருந்திருக்கிறார்கள்.

**அப். பணி (திப) 10:10, 11:5, 22:17**

**∟ அந்நியபாஷைகள், தரிசனங்கள்**

பெந்தெகொஸ்தே, கரிஸ்மட்டிக் வட்டாரங்களில் மட்டுமே இந்த ஆவியின் வரங்கள் சிறப்புப்பெற்றிருக்கும் என்று சொல்ல முடியாது. அநேகமாக ஒவ்வொரு கிறிஸ்தவ சபைப்பிரிவிலும், கத்தோலிக்க சபையிலும் மக்களுக்கு ஆவியானவர் பேச்சாற்றல் கொடுப்பதால் தொடர்ந்து அந்நியபாஷை பேசுகிறார்கள். ஒரு சிலர் நூற்றுக்கணக்கான நவபாசை பேசுவார்கள்.

**அப். பணி (திப) 2:4, 10:44-45, 19:1-11, 1 கொரி 12:10**

அப்பொழுது ஆவியொன்று என்முன்னால் கடந்து போயிற்று, என் உடல் மயிர் கூச்செறிந்தது. **யோபு 4:15** (தீய ஆவி கடந்து சென்றாலும் மயிர் கூச்சிடும்.)

**இறுதி நாட்களில் எல்லோர் மேலும் என் ஆவியைப் பொழிவேன்.**

உங்கள் புதல்வர் புதல்வியர் இறைவாக்கு உரைப்பர், உங்கள் இளைஞர் காட்சிகள் அருளப்பெறுவர், உங்கள் முதியோர் கனவுகள் காண்பர். ஆம், அப்பொழுது என் அடியான், என் அடியாள் ஒவ்வொருவர் மீதும் என் ஆவியைப் பொழிவேன்; அவர்களும் இறைவாக்கு உரைப்பர்.

**அப்.பணி (திப) 2:17,18, யோவேல் 2:28,29**

**... இன்று இந்த வேத வசனங்கள் நிறைவேறுகின்றன.**

**ஆவியானவர் யாவற்றையும் ஊடுருவிக் காண்கிறார்.**

“இதைக் கடவுள் தம் ஆவியின் வழியாய் நமக்கு வெளிப்படுத்தினார். ஆவியானவர் எல்லாவற்றையும் ஊடுருவிக் காண்கிறார். கடவுளுடைய உள்ளத்தின் ஆழத்தையும் காண்கிறார். மனிதனின் உள்ளத்தில் இருப்பதை மனிதனுக்குள் இருக்கும் அவன் ஆவியேயன்றி வேறெவரும் அறியார். அவ்வாறே கடவுளின் உள்ளத்தில் இருப்பதைக் கடவுளின் ஆவியேயன்றி வேறெவரும் அறியார். நாம் பெற்றுக்கொண்டது இந்த உலகத்தின் மனப்பான்மையன்று, கடவுளிடமிருந்து வரும் ஆவியே. கடவுள் நமக்கு அருளியவற்றை அந்த ஆவியினால் உணரக்கூடும். அவற்றை நாங்கள் மனித ஞானம் கற்பிக்கும் சொற்களால் பேசாமல், ஆவியானவர் கற்பிக்கும் சொற்களால் பேசுகிறோம். இங்ஙனம், தேவ ஆவியைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு ஆவிக்குரியவற்றை விளக்கியுரைக்கிறோம். மனித இயல்பால் மட்டும் இயங்குபவன் கடவுளின் ஆவிக்குரியவற்றை ஏற்றுக் கொள்வதில்லை. அவை அவனுக்கு மடமையாகத் தோன்றும். அவற்றை அவனால் அறியவும் இயலாது. ஏனெனில், தேவ ஆவியைக் கொண்டுதான் அவற்றை மதித்துணர முடியும். அந்த ஆவியைப் பெற்றுக் கொண்டவன் எல்லாவற்றையும் மதித்துணர்கிறான். அவனையோ, ஆவியைப் பெறாத எவனும் மதித்துணர முடியாது.”

**1 கொரி 2:10-16**

==========================================

# 16. தேவனைத்தேடும் பிள்ளைகள் அவரில் வளர இயலவில்லை ஏன்?

தேவனில் வாழத்துடிக்கும் பிள்ளைகள் தேவ ஆவியின் ஐக்கியத்தில் வளரத் தடையாக இருப்பது, அவர்களுடைய பாவங்களே; **(எசாயா 59:1-2).** எனவே தேவனில் வளர பாவத்தைவிட்டு விலகுவது இன்றியமையாதது.

பத்துக்கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் கருத்தாய் இருக்கவேண்டும். அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவானது மூன்று வகைகளில் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகிறது. அவைகளாவன:

### 1. தேவனுக்கு எதிரான வழிபாடு:

இது நமக்கும் தேவனுக்கும் இடையே உள்ள உறவை முறித்து, நம்மை அவரிடமிருந்து முழுமையாகப் பிரித்துவிடுகிறது. எனவே உயிரே போனாலும் இந்த தவற்றைச் செய்வதில்லை என்று உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும்.

### 2. மனித உள்ளத்திலிருந்து வரும் தீயவை:

மனித உள்ளத்திலிருந்தே தீய எண்ணம், மோகம், களவு, கொலை, விபச்சாரம், பேராசை, தீச்செயல், கபடு, கெட்ட நடத்தை, பொறாமை, பழிச்சொல், செருக்கு, மதிகேடு ஆகியவை வெளிவரும். இத்தீயவையாவும் உள்ளத்திலிருந்து வந்து மனிதனை மாசுபடுத்தும்.**(மாற் 7: 20-23).** எனவே நமது எண்ணங்களும், சிந்தனைகளும் தேவனுக்கு உகந்ததாக இருக்க வேண்டும்.

## 3. நமது உடல் மற்றும் உடல்சார்ந்த உறுப்புக்களின் தீட்டு:

நமது உடலும் மற்றும் ஐம்புலன்களும் பெரிதும் பாதிக்கப்படுவது ஒழுக்கக்கேடான இச்சைகளினாலேயே. ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்கும் எவனும் ஏற்கனவே உள்ளத்தில் அவளோடு விபச்சாரம் செய்தாயிற்று. **(மத் 5:28)** எனவே, ஆண், பெண்ணையும் பெண், ஆணையும் இச்சையோடு பார்ப்பதாலும், இணையதளத்தில் ஆபாச படங்களை பார்ப்பதாலும், கண்கள் தீட்டுப்படுவதோடு அல்லாமல், நமது எண்ணங்களும், இறுதியாக உடல் முழுவதுமே தீட்டுப்படுகிறது. இவ்வாறு ஒரு தீய இச்சையினால், சம்பந்தப்பட்ட உறுப்பு மட்டுமல்லாமல், எண்ணங்களும் அதைத் தொடர்ந்து உடல் முழுவதுமே தீட்டுப்படுகிறது. மேலும் தேவன் வெறுக்கும் தீச்செயல்களான ஆண் ஆணோடும், பெண் பெண்ணோடும் புணர்வது, **(லேவி 18:22; உரோ 1:26,27; யூதா 1:7)** மாதவிலக்கு காலங்களில் பெண்ணோடு புணர்தல், **(லேவி 18:19; எசே 22:10)** பெண்ணை விலங்கைப்போல் (குனிய வைத்து) புணர்தல், **(எபி 13:4)** சுயஇன்பம், **(1கொரி 6:9)** விலங்கோடு புணர்தல், **(லேவி 18:23)** இப்படிப்பட்ட இயல்புக்கு மாறான ஒழுக்கக்கேட்டினின்று நம்மைப் பாதுகாத்துக்கொள்வது நமது கடமையாகும். **(ஞான(சாஞா) 14:26)**

நாம் ஏறெடுக்கும் துதியானது தேவனை அடைய நாம் நமது நாவை பரிசுத்தமாகப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாதது. தேவனுக்கு உகந்த வார்த்தைகளையே பேசவேண்டும்.

மூடன் தன் கைகளைக் கட்டிக்கொண்டு, தன் சதையையே தின்கிறான். **பிரசங்கி (சங். திரு) 4:5**

உன் மாம்சத்தைப் பாவத்துக்குள்ளாக்க உன்

வாய்க்கு இடங்கொடாதே; அது புத்திபிசகினால் செய்தது என்று தூதனுக்குமுன் சொல்லாதே; தேவன் உன் வார்த்தைகளினாலே கோபங்கொண்டு, உன் கைகளின் கிரியையை அழிப்பானேன்? **பிரசங்கி 5:6 (சங். திரு 5:5)**

மேலும் ஆண் பெண் உடலுறவின் போது, பிறப்புறுப்புகள் இணையும்படியாகவும் அதனால் ஒரு உயிர் உண்டாக வாய்ப்பு அமையும்படியாகவும் கடவுள் மனிதனை வடிவமைத்துள்ளார். மற்ற வகையான உடலுறவுகள், கடவுள் மனிதனை வடிவமைத்த நோக்கத்திற்கு மாறானது. (The human person was designed by God so that sexual relations would consist in acts of genital-to-genital intercourse, open to life, between one man and one woman. Other kinds of sexual acts are contrary to this intention and purpose of God, which He designed within human nature.)

இயற்கைக்கு மாறான ஒழுங்கீனமான காமச்செயல்களாவன: சுயஇன்பம், ஓரினச்சேர்க்கை, இருவருக்கு மேல் பங்கெடுத்தல் (Group sex), வாயில் புணர்தல், ஆசனவாயில் புணர்தல், காம இன்பம் பெற கைகளை மற்றும் பிற பொருட்களை, உபகரணங்களை உபயோகித்தல் (இந்தவகையான உறவால் உயிர் உண்டாகவாய்ப்பில்லை. ஏனெனில், கடவுள் மனிதனை ஒரு உயிர் உண்டாக வாய்ப்பு அமையும்படியாக வடிவமைத்துள்ளார்) (Examples of intrinsically disordered sexual acts include: masturbation, homosexual acts, any sexual acts with more than two participants, oral sex, anal sex, manual sex, sexual acts involving objects or devices, etc.)

மேற்சொல்லப்பட்ட காமச்செயல்கள் திருமணமான தம்பதிகளிடையே செய்யப்பட்டாலும் அது பாவமே.

(These acts are immoral, even if such acts are between a man and a woman who are married to each another.)

***Catechism of the Catholic Church, (CCC) n. 2352.***
***http://www.catechism.cc/articles/marriage-sins.htm***

காமப்பாவம் என்பது, பாலியல் இன்பத்தை ஒழுங்கற்ற முறையில் அனுபவித்தல் ஆகும். குழந்தை பெறும் நோக்கத்தோடு, பிறப்புறுப்புகள் இணையப்பெற்ற பாலியல் இன்பம் தவிர மற்ற அனைத்து உடலுறவும் முறையற்றதே. ( Lust is disordered desire for or inordinate enjoyment of sexual pleasure. Sexual pleasure is morally disordered when sought for itself, isolated from its **procreative** and **unitive** purposes.)

***Catechism of the Catholic Church, (CCC) n. 2351.***

**Procreative** means generative; producing new life or offspring;

**Unitive** means genital-to-genital intercourse of husband and wife.

***http://www.vatican.va/archive/ccc_css/archive/catechism/ p3s2c2a6.htm #1***

மனித சரீரத்தில் வாய் உண்பதற்காக படைக்கப் பட்டுள்ளது. வாய் புணர்வதற்காக அல்ல.
( Your mouth is to eat with and is part of your digestive system. It is not for oral sex.)

***http://www.christian-life-advisor.com/oral-sex-and-christian-marriage.html***

வாயில் புணர்தல் என்பது உறுப்புகளை அசுத்தப்படுத்தி, உடல் மற்றும் ஆன்மாவின் புனிதத்தன்மையை குலைக்கும் செயலாகும். இது ஒரு புதிய உயிரையோ, குழந்தையையோ உண்டுபண்ணாது.

மேலே குறிப்பிடப்பட்ட பாவங்கள் பெரும்பாலான விசுவாசிகளிடம் பரவலாகக் காணப்படுகின்றன. எனவே தேவனின் ஆவி நம்மில் தங்குவதில்லை. அதனால் நாம் அவரில் வளர இயலவில்லை.

## பாவத்தின் விளைவு

தாங்கள் செய்த அக்கிரமத்தினால் அவர்கள் நோய்களுக்கு உள்ளாயினர்: அவர்களுடைய பாவங்களின் பொருட்டுத் துன்பங்களுக்கு உள்ளாயினர். **சங் 106(திபா 107):17**

உங்களுக்கு நன்மை வராமல் தடுத்தவை நீங்கள் செய்த பாவ அக்கிரமங்களே. **எரே 5:25**

ஒரே பாவத்தினாலே மனிதன் அநேக நன்மைகளை இழப்பான். **சங். திரு(சஉ) 9:18**

## நமது கடமை

கடவுளுக்கு பயந்து அவருடைய கட்டளைகளைக் கடைபிடித்து வருவதே மனிதர் யாவர் மேலும் சுமந்த கடமை: மனிதர் செய்து வருகிற புண்ணிய பாவமோ தவறோ எவ்விதமானாலும், அவைகளையெல்லாம் கடவுள் நீதி நியாயத்தின்படி தீர்ப்புச் செய்வார். **சங். திரு(சஉ) 12:13,14**

கடவுள் நம்மை ஒழுக்கக்கேட்டிற்கு அல்ல, தூய வாழ்விற்கே அழைத்தார். எனவே இக்கட்டளைகளைப் புறக்கணிப்போர், மனிதரை அல்ல, தம்முடைய தூய ஆவியை உங்களுக்கும் அளிக்கும் கடவுளையே புறக்கணிக்கின்றனர். **1தெச 4:7,8**

ஆகவே, பாவங்கள் செய்திருந்தால் மெய்யான மனவருத்தப்பட்டு குருவிடம் அறிக்கையிட்டு, இனிச்செய்வதில்லை என்று உறுதியெடுத்து தூய வாழ்க்கை வாழ்வோம்.

தூய உள்ளம் கொண்டோர் கடவுளைக் காணலாம். கண்களில் தூய்மையுள்ளோர் காட்சிகள் காணலாம். காதுகள் தூய்மையாயிருந்தால் அவரின் குரலைக் கேட்கலாம். எண்ணங்கள் தேவனுக்கு உகந்ததாயிருந்தால், நம் சிந்தையில் அவர் பேசுவதை உணரலாம்.

எனவே, தேவனில் வாழத்துடிக்கும் பிள்ளைகளே பரிசுத்த ஆவியைப் பெற்றவன் பாவம் செய்தால் அவன் பின்னைய நிலை முன்னைய நிலையை விட மோசமாய் போய்விடும். **(மத் 12:43-45)** என்பதை மனதில் கொண்டு தினமும் பாவமன்னிப்பு கேட்பதிலும், ஜெபிப்பதிலும் நிலைத்திருப்போம். உடல், உள்ளம், ஆன்மாவை தேவனுக்கு அர்ப்பணித்து முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு மனத்தோடும்,முழு வலிமையோடும் அவரைத் தேடினால் அவரது ஆவி நம்மை ஆட்கொள்ளும் நாமும் அவரில் வளர்வோம். இறுதிவரை நிலைத்திருந்து நிலைவாழ்வைப் பெறுவோம்.

## உண்மை ஊழியரின் ஆலோசனை பெறுக

ஆழ்ந்து பாவ மன்னிப்பு கோரும்போது அடிக்கடி கொட்டாவி விடுவார்கள். சிலர் வாந்தி எடுப்பார்கள். **(எரே 25 : 27)** இவைகளை தடுத்து நிறுத்தக்கூடாது. இருப்பினும் சூழ்நிலை அறிந்து, இவைகளை உங்கள் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட மாறுதல்களை தன் உடலில் பெறுகிறவர்கள் ஒரு உண்மை ஊழியரிடம் சென்று தன்னைப் பற்றி கலந்து ஆலோசித்துக் கொள்ளவேண்டும். அந்த ஊழியர், குறைந்தது நவபாசை வரமாவது பெற்றவராயிருக்க வேண்டும். நவபாசையில்லாத ஊழியர்களுக்கு இவைகள் விநோதமாகத் தோன்றும். ஒருவேளை அவர்கள் உங்களை நேரிய வழியில் நடத்த இயலாமல் போகலாம்.

## 17. லொரேட்டோ மாதா பிரார்த்தனை

சுவாமி கிருபையாயிரும்.
கிறிஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமி கிருபையாயிரும்.
கிறிஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.
கிறிஸ்துவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

பரமண்டலங்களிலே இருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,
**எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.**
உலகத்தை மீட்டு இரட்சித்த சுதனாகிய சர்வேசுரா,
பரிசுத்த ஆவியாகிய சர்வேசுரா,
அர்ச்சியசிஸ்ட தமத்திரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா,

அர்ச்சியசிஸ்ட மரியாயே,
**எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**
சர்வேசுரனுடைய அர்ச்சியசிஸ்ட மாதாவே,
கன்னியாஸ்திரிகளுக்குள்ளே உத்தம அர்ச்சியசிஸ்ட மாதாவே,
கிறிஸ்துவினுடைய மாதாவே,
திருச்சபையின் மாதாவே,
தேவப்பிரசாதத்தின் மாதாவே,
மகா பரிசுத்த மாதாவே,
அத்தியந்த விரத்தியாயிருக்கிற மாதாவே,
பழுதற்ற கன்னியாஸ்திரியாயிருக்கிற மாதாவே,

# The Loreto Litanies

Lord have mercy.
Christ have mercy.
Lord have mercy.
Christ hear us.
Christ graciously hear us.

God, the Father of heaven,
***have mercy on us.***
God the Son, Redeemer of the world,
God the Holy Spirit,
Holy Trinity, one God,

Holy Mary,
***pray for us.***
Holy Mother of God,
Holy Virgin of virgins,

Mother of Christ,
Mother of the Church,
Mother of divine grace,
Mother most pure,
Mother most chaste,
Mother inviolate,

கன்னி சுத்தங் கெடாத மாதாவே,
மகா அன்புக்குப் பாத்திரமாயிருக்கிற மாதாவே,
ஆச்சரியத்துக்கு உரிய மாதாவே,
நல்ல ஆலோசனை மாதாவே,
சிருஸ்டிகருடைய மாதாவே,
இரட்சகருடைய மாதாவே,
மகா இரக்கத்தின் மாதாவே,
மகா புத்தி உடைத்தான கன்னிகையே,
மகா வணக்கத்துக்கு உரிய கன்னிகையே,
பிரகாசமாய் இஸ்துதிக்கப்படயோக்கியமாயிருக்கிற கன்னிகையே,
சக்தி உடையவளாயிருக்கிற கன்னிகையே,
தயையுள்ள கன்னிகையே,
விசுவாசியாயிருக்கிற கன்னிகையே,
தருமத்தினுடைய கண்ணாடியே,
ஞானத்துக்கு இருப்பிடமே,
எங்கள் சந்தோசத்தின் காரணமே,
ஞான பாத்திரமே,
மகிமைக்குரிய பாத்திரமே,
அத்தியந்த பக்தி உடைத்தான பாத்திரமே,
தேவ இரகசியத்தைக்கொண்டிருக்கிற ரோசா என்கிற புஸ்பமே,
தாவீது இராசாவினுடைய உப்பரிகையே,
தந்த மயமாயிருக்கிற உப்பரிகையே,
சொர்ண மயமாயிருக்கிற ஆலயமே,
வாக்குத் தத்தத்தின் பெட்டகமே,
பரலோகத்தினுடைய வாசலே,

Mother undefiled,
Mother most amiable,
Mother admirable,
Mother of good counsel,
Mother of our Creator,
Mother of our Saviour,
Mother of mercy,
Virgin most prudent,
Virgin most venerable,
Virgin most renowned,

Virgin most powerful,
Virgin most merciful,
Virgin most faithful,
Mirror of justice,
Seat of wisdom,
Cause of our joy,
Spiritual vessel,
Vessel of honour,
Singular vessel of devotion,
Mystical rose,

Tower of David,
Tower of ivory,
House of gold,
Ark of the covenant,
Gate of heaven,

விடியற் காலத்தின் நட்சத்திரமே,
வியாதிக்காரருக்கு ஆரோக்கியமே,
பாவிகளுக்கு அடைக்கலமே,
கஸ்திப் படுகிறவர்களுக்குத் தேற்றரவே,
கிறிஸ்தவர்களுடைய சகாயமே,
சம்மனசுகளுடைய இராக்கினியே,
பிதாப் பிதாக்களுடைய இராக்கினியே,
தீர்க்கதரிசிகளுடைய இராக்கினியே,
அப்போஸ்தலர்களுடைய இராக்கினியே,
வேத சாட்சிகளுடைய இராக்கினியே,
இஸ்துதியருடைய இராக்கினியே,
கன்னியர்களுடைய இராக்கினியே,
புனிதர்களுடைய இராக்கினியே,
சென்ம பாவம் இல்லாமல் உற்பவித்த இராக்கினியே,
பரலோகத்துக்கு ஆரோபணமான இராக்கினியே,
பரிசுத்த செபமாலை இராக்கினியே,
குடும்பங்களின் இராக்கினியே,
சமாதானத்தின் இராக்கினியே.

உலகத்தின் பாவங்களைப் போக்கும் சர்வேசுரனுடைய
செம்மறிப் புருவையாகிய இயேசுவே,
**எங்கள் பாவங்களைப் போக்கியருளும் சுவாமி.**

உலகத்தின் பாவங்களைப் போக்கும் சர்வேசுரனுடைய
செம்மறிப் புருவையாகிய இயேசுவே,
**எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும் சுவாமி.**

Morning star,
Health of the sick,
Refuge of sinners,
Comfort of the afflicted,
Help of Christians,
Queen of Angels,
Queen of Patriarchs,
Queen of Prophets,
Queen of Apostles,
Queen of Martyrs,
Queen of Confessors,
Queen of Virgins,
Queen of all Saints,
Queen conceived without original sin,
Queen assumed into heaven,
Queen of the most holy Rosary,
Queen of families,
Queen of peace.

Lamb of God, who takes away the
sins of the world,
***spare us, O Lord.***

Lamb of God, who takes away the
sins of the world,
***graciously hear us, O Lord.***

உலகத்தின் பாவங்களைப் போக்கும் சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய இயேசுவே
**எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.**

**முதல்வர்:** இயேசுக் கிறிஸ்து நாதருடைய திருவாக்குத் தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களாய் இருக்கத்தக்கதாக.

**அனைவரும்: சர்வேசுரனுடைய பரிசுத்த மாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

செபிப்போமாக!

சர்வேசுரா சுவாமி! முழுமனதுடனே தெண்டனாக விழுந்து கிடக்கிற இந்தக் குடும்பத்தைப் பார்த்து எப்பொழுதும் பரிசுத்த கன்னிகையான முத்திப் பேறுபெற்ற மரியாயினுடைய வேண்டுதலினாற் சகல சத்துருக்களின் சற்பனையிலே நின்று பிரசன்னராய்த் தயை செய்து இரட்சியும். இந்த மன்றாட்டுக்களை எல்லாம் எங்கள் ஆண்டவரான இயேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும். - ஆமென்.

*(இம்மாதா பிரார்த்தனை, 1558-ஆம் ஆண்டு இத்தாலி நாட்டில் உள்ள லொரேட்டோ மாதா பேராலயத்தில் தோன்றியது. 1587-ஆம் ஆண்டு முதல், திருத்தந்தை ஐந்தாம் சிக்ஸ்டஸ் அவர்களால் கத்தோலிக்க திருச்சபையின் பொது பயன்பாட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.)*

Lamb of God, who takes away the
sins of the world,
***have mercy on us.***

**Versicle:** Pray for us, O holy Mother of God.

***Response:* *That we may be made worthy of the promises of Christ.***

## Let us Pray!

Grant, we beseech thee,
that we, your servants,
may enjoy perpetual health of mind and body;
and by the intercession of the Blessed Mary,
ever virgin,
may be delivered from present sorrow,
and obtain eternal joy.
Through Christ our Lord. – Amen.

*(This Marian litany was originated at the Shrine of Our Lady of Loreto (Italy), in 1558. It was approved by the Catholic Church in 1587 for the public use by Pope Sixtus V.)*

**அர்ச்சியஷ்ட சிலுவை ஜெபம்**

அர்ச்சியஷ்ட சிலுவை அடையாளத்தினாலே / எங்கள் சத்துருக்களிடமிருந்து எங்களை இரட்சித்தருளும் / எங்கள் சர்வேசுரா / பிதா / சுதன் / பரிசுத்த ஆவியின் பெயராலே.

\- ஆமென்.

**தனிச்சுற்றுக்கு மட்டும்**

**இப்புத்தகத்தின் செய்திகள் தவறாகக் கையாளப்படுவதை தவிர்ப்பதற்காக இப்புத்தகம் மொழி பெயர்க்கப்படவோ, அச்சிடப்படவோ, இதில் ஏதேனும் ஒரு பகுதியையோ எந்தவகையிலும் பிரதி எடுப்பதும், வெளியிடுவதும் தடை செய்யப்பட்டுள்ளது.**